தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

கலைச்சொற்கள் - கண்ணோட்டம்!

ம.ரா. பூபதி, M.A.

ஆசிரியர் இந்தக் கட்டுரையின் மூலம், தமிழிலே கலைச் சொற்கள் இல்லை என்பாருக்கும், தமிழ் ஆட்சிமொழியாவதற்குப் போதிய தகுதி இல்லை என்பாருக்கும் தக்க மறுப்புத் தந்திருக்கிருர். காட்டப்பட்டிருக்கும் சான்றுகள் அத்தனையும் மறுக்க முடியாதவை.

அடுத்த ஆண்டு கல்விச் சோலையில் கனி கொழிக்கும் ஆண்டு; நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக ஆங்கில மொழியில் சிக்கிக் கிடந்த கல்லூரிக் கல்வி அடுத்த ஆண்டு விடுதலை பெறப் போகின்றது. தமிழ் மாணவர் தமிழில் கல்லூரிப் படிப்பைச் சுவைக்கப் போகின்றனர்! ஆங்கில மாணவர் ஆங்கிலத்தில் கல்வி கற்பதை விழாவாகக் கொண்டாடினல், ஃபிரெஞ்ச்சு மாணவர் ஃபிரெஞ்ச்சு மொழியில் கல்வி பெறுவதை விழாவாகக் கொண்டாடினல், இரழ்சிய மாணவர் இரழ்சியத்தில் கல்வி பெறுவதை விழாவாகக் கொண்டாடினல் அவ்வந் நாட்டாருக்கு அது புதுமையாகத் தோன்றும். அவரவர் மொழியில் அவரவர் கல்வி கற்கின்றனர், இதற்கு விழா ஏன் என்று கேட்பர் பிற நாட்டார். ஆனல், தமிழ் நாட்டில் மாணவர் தமிழில் கல்வி பெறுவதை—இல்லை, அதற்குள் அவசரப்பட்டு விடக்கூடாது—பெறப் போவதை விழாவாகத்தான் கொண்டாட வேண்டி இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொருத்தவரை இதனை ஒரு பெரும் புரட்சி என்று கூற வேண்டும். இந்தப் புரட்சியை எல்லோரும் வரவேற்க வேண்டும்.

ஆங்கிலத்தைப் பயிற்சி மொழிப் பதவியிலிருந்து எப்படியும் விலக்கி விடுவது என்று எல்லோரும் முடிவு செய்து விட்டார்கள். அப் பதவியில் மீண்டும் எந்த மொழியை அமர்த்துவது? தமிழர் சோம்பலில் மூழ்கி வீண்காலம் போக்கினல், ஆதிக்கச் சிறையடித்து வானத்தில் வட்டமிடும் இந்திக் கழுகு திடீரென்று பாய்ந்து அப்பதவியைப் பற்றிக்கொள்ளும். ஆகவே, தமிழ் நாட்டில் உள்ள அனைவரும், கட்சி வேறுபாட்டைக் கருதாது, பெரியவன் சிறியவன், படித்தவன், படிக்காதவன், அறிஞன் அடிமுட்டாள் என்பவற்றை எல்லாம் தொலைவில் ஒதுக்கி விட்டுக் கல்லூரியில் தமிழைக் கல்வி மொழியாக்க இடைவிடாமல் முயலவேண்டும்.

இன்றுள்ள அரசியலார், கல்லூரியில் தமிழைக் கல்வி மொழியாக்க வேண்டும் என்ற முடிவுக்குத் திடீரென்று வந்துவிட வில்லை: பல ஆண்டுகளாக மக்களும், மாணவரும், நேர் முறையிலும் மறை முகமாகவும் செய்து வந்த போராட்டத்தின் விளைவே அரசியலாரின் முடிவு. அரசியலார் முடிவுக்குப் பல்கலைக் கழகமும் இணங்கிவிட்டது. ஆகவே, அடுத்த ஆண்டு, கல்லூரி மாணவரின் முகங்களில், தமிழ் மொழி வகுப்புக்களில் காண்கின்ற மகிழ்ச்சியலைகளை மற்றப் பாட வகுப்புக்களிலும் காணமுடியும்!

கல்லூரியில் தமிழைக் கல்வி மொழியாக்குவதற்கு எத்தனையோ முட்டுக் கட்டைகள் தோன்றின. தமிழறிவு இல்லாத ஆசிரியர்கள் சிலர் தமிழில் எப்படிப் பாடங்களை நடத்த முடியும் என்றனர். வேறு சிலர், வரலாறு, பொருள் நூல் முதலியவற்றை வேண்டுமானல் தமிழில் ஓரளவு நடத்திவிடலாம். ஆனல், விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் கற்பிப்பது இயலாது என்று கூறினர். விஞ்ஞானக் கலைச் சொற்கள் தமிழில் இல்லை, உண்டாக்குவதும் முடியாது என்றனர் மற்றும் சிலர்; அவற்றைத் தமிழில் உண்டாக்கலாம், என்றாலும் அவையாவற்றையும் தமிழில் உண்டாக்கும்வரை தமிழைக் கல்வி மொழியாக்க முடியாது என்றனர் பின்னும் சிலர். இத்தகைய பழம் பாசிகள் விளைத்த முட்டுக் கட்டைகளையெல்லாம் தாண்டிக்கொண்டு தமிழ்த் தேர் ஒருவாறு ஊர்ந்து வந்து விட்டது. கலைச்சொற்களை (Technical Terms) மொழி பெயர்க்காமல், எழுத்துப் பெயர்ப்புச் (Transliteration) செய்துகொண்டு விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கலாம் என்ற முடிவுக்கு அரசியலாரும், பல்கலைக் கழகத்தினரும் வந்துள்ளனர்.

எழுத்துப் பெயர்ப்பு (Transliteration) என்பது கலைச் சொற்களின் ஒலியை அப்படியே தமிழ் எழுத்துக்களால் எழுதுவது. எடுத்துக் காட்டாக, Hydro Chloric Acid என்ற கலைச் சொல்லை 'அப்ஜஹரிதகிகா அமிலம்' என்று பெயர்த்துக் குட்டையைக் குழப்பாமல், அய்ட்ரோஃகுலோரிக் ஆசிட் என்று எழுதிவிடுவது. இதன் மூலம் ஆங்கில மோகிகள் ஆர்வத்துடன் இடும் முட்டுக் கட்டையைத் தூளாக்கி விடலாம் என்பது மறுக்க இயலாத உண்மை; எனினும், சில இன்னல்களும் எழுத்துப் பெயர்ப்பு முறையில் எதிர்ப்படுகின்றன.

தமிழில் ஓர் எழுத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகள் உள்ளன. அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் குறிக்க ஓர் எழுத்தே பயன்படுத்தப் படுகின்றது. எடுத்துக் காட்டாக, 'க்' என்ற மெய் எழுத்தை எடுத்துக் கொள்ளலாம். இதை 'g' என்பது போல ஒலிப்பதா, அல்லது 'K' என்பது போல ஒலிப்பதா? அதே போன்று 'ப்' என்ற மெய்யை, 'b' என்பது போல ஒலிப்பதா, அல்லது 'P' என்பது போல ஒலிப்பதா?

மூத்தோர் மொழி

"மனிதன், பிறந்தது முதல் இறக்கும் வரை வாதாடிக் கொண்டேயிருக்கிருன்; மனிதன் பிறப்பே வாதாட்டத்துடன்தான் துவங்குகிறது; அப்படி மனிதன் வாழ்வு முழுவதும் மேற்கொள்ளுகிற வாதாட்டங்கள்தான், பகுத்து-வகுத்து-தொகுத்து உருவாக்கப்படும்போது சட்டமாக்கப்படுகிறது: அப்படிப்பட்ட சட்டங்கள் தமிழில் ஆக்க முடியாதென்பதல்ல:

"இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செலுத்திய தமிழ் மன்னர்கள் தமிழ் மொழியில்தானே ஆட்சி செலுத்தினர்?

—அறிஞர் அண்ணு.

இத்தகைய இடர்ப்பாடுகள் எழுத்துப் பெயர்ப்பில் குறுக்கிடுவதால், எழுத்துப் பெயர்ப்பும் நன் முறையில் செய்ய இயலாது என்று சிலர் எண்ணுகின்றனர். இன்னும், தமிழில் சில ஒலிகளைக் குறிக்க எழுத்துக்களே இல்லை; எடுத்துக் காட்டாக 'J' (ஜ்), 'sh' (ஷ்), 'ksh' (க்ஷ்), 'h' (ஹ்), 'F', 'Z' முதலிய ஒலிகளைத் தமிழில் எழுத முடியாது, ஆகவே எழுத்துப் பெயர்ப்பு வெற்றி பெருது என்றும் கூறுகின்றனர்.

இவ் எதிர்ப்பு வாதிகட்கு விடையளிப்பது போலச் சிலர், ஷ, ஸ, ஜ, க்ஷ, ஹ, F, Z முதலிய எழுத்துக்களைக் கடன் வாங்கிக் கொண்டு கலைச் சொற்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்யலாம் என்று கூறுகின்றனர். இவ் இருதிறத்தார் கொள்கைகளும் தவருனவையாக இருப்பதோடு, தமிழைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள புல்லிய எண்ணத்தை விளக்குவனவாகவும் உள்ளன. 'ஷ' முதலிய ஒலிகளைத் தமிழில் எழுத முடியாது என்பவர்களும் 'தமிழ் மொழி எழுத்துக்கள் ஏழ்மையானவை' என்ற எண்ணத்தையே கொண்டுள்ளனர்; அவ் எழுத்துக்களை வேறு மொழியிலிருந்து கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று கூறுவோரும் 'தமிழ் எழுத்துக்கள் ஏழ்மை மிக்கவை' என்ற எண்ணத்தையே கொண்டுள்ளனர். ஆனல் இவர்கள் எண்ணிக் கொண்டிருப்பது போன்று தமிழ் எழுத்துக்கள் அவ்வளவு ஏழ்மை மிக்கவை அல்ல என்பது நுனித்து நோக்கும் நுண்மதியாளர்க்கு விளங்கும்.

தமிழின் பால்—ஏன்? எந்த மொழியிடத்திலுமே—நேர்மையான பற்றுக்கொண்ட எவரும் ஓர் உண்மையை மறக்கக்கூடாது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்களே உள்ளன. இவ் இருபத்தாறு எழுத்துக்களுக் குள்ளேயே உலகத்தில் உள்ள ஒலிகளை எல்லாம் அவர்கள் அடைத்து விடுகின்றனர். ஆங்கிலத்தில் 'ஷ' என்ற ஒலிக்குத் தனி எழுத்து உள்ளதா? இல்லை. பின், எப்படி ஆங்கிலேயர் அவ் ஒலியை எழுதுகின்றனர்? 'sh' என்று இரண்டு எழுத்துக்களைப் பிணைத்து எழுதுவதன் மூலம் அவ் ஒலியைக் குறிக்கின்றனர். எடுத்துக் காட்டு 'Push' என்ற சொல். இதை முறைப்படி படிக்க வேண்டுமானல் "புஸ்ஹ" என்று படிக்க வேண்டும். ஆனல் ஆங்கிலத்தில் சிற்றறிவு படைத்தவர் கூட அப்படிப் படிப்பதாகத் தெரியவில்லை. மற்றும் சில இடங்களில் 's' என்ற எழுத்தைக் கொண்டே 'ஷ' ஒலியைக் குறிக்கின்றனர். காட்டு: Vision. தமிழில் உள்ள 'ழ்' என்ற ஒலியை ஆங்கிலத்தில் எப்படிக் குறிக்கின்றனர்? 'Zh' என்று இரண்டெழுத்துக்களை இணைத்து எழுதுவதன் மூலம், குறிக்கின்றனர்.

ஆங்கிலேயர் ஏன் மேற் கூறியவாறெல்லாம் தொல்லைப்பட வேண்டும்? Push என்பதை "puஷ" என்று எழுதலாம்; Vision என்பதை "viஷan" என்று எழுதலாம்; கருங்குழி என்பதை "Karunguழi" என்று எழுதலாம்; அஃறிணை என்பதை "aஃறinai" என்று எழுதலாம். ஆனல் எந்த ஆங்கிலேயனும் இப்படி எழுதுவதாகத் தெரியவில்லை. 26 எழுத்துக்களைக் கொண்டே ஆங்கிலேயன் தன்மானத்துடன் வேற்று மொழி எழுத்துக்களைக் கடன் வாங்காமல் இருக்கும்போது,—தன்னிடமுள்ள 26 எழுத்துக்களைக் கொண்டே உலகத்து ஒலிகளை எல்லாம் குறித்துக் காட்ட முடியும் என்று வீறுப்புக் கொள்ளும்போது, 31 எழுத்துக் குறிகளை உடைய தமிழன் மட்டும் ஏன் தன் மொழி எழுத்துக்கள் ஏழ்மையானவை என்று எண்ணிக்கொண்டு, வேற்று மொழியின் எழுத்துக் கடன் தருமா என்று காவடி தூக்கி ஏங்க வேண்டும்?

தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த புலவர்கள் அனைவரும் ஆராய்ச்சி மிக்கவர்கள், ஒலி இயலை உணர்ந்தவர்கள் என்பது தெளிவு. அவர்கள் பிறமொழிச் சொற்களை வேண்டுமானல் கடன் வாங்கலாம் என்று கூறி இருக்கிருர்களே ஒழிய, பிறமொழி எழுத்துக்களைக் கடன் வாங்கலாம் என்று எந்த இடத்திலும் கூறவில்லை. திசைச் சொற்களும், வட சொற்களும் தமிழில் வழங்கலாம் என்று வழி திறந்து வைத்த இலக்கணப் புலவர்கள், திசை எழுத்துக்களும் வட எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களிடையே வாலை நீட்டலாம் என்று விதியமைக்காத காரணம் என்ன? அப்படி ஒரு சிறு விதி மட்டும் அவர்கள் 'மெத்தப் பரந்த மனப்பான்மை'யுடன் செய்து விட்டிருந்தால், தமிழ் மொழி என்னவாகி இருக்கும்? இன்று, சீன மொழியில் உள்ள எழுத்துக்களை விடத் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். சீன மொழியில் உள்ள எழுத்துக்களை மட்டும் கற்றுக்கொள்ள ஒருவனுக்கு ஏழு ஆண்டுகள் செல்லுமாம்; அப்படியானல் பிறமொழி எழுத்துக்கள் கலந்த தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள ஒருவன் ஆயுளே சரியாக இருந்திருக்கும்.

தொல்காப்பியர் ஒலி இயலை நன்குணர்ந்தவர். 'ஷ' முதலிய எழுத்துக்களைக் கடன் வாங்கியே ஆகவேண்டும், அதுதான் பரந்த மனப்பான்மை (இப்படிக் கூறுவதன்மூலம் மற்றவர்களைக் காக்காய் பிடிப்பது பரந்த மனப் பான்மையின் அறிகுறியாக இருக்கலாம்) என்று வீறுப்புப் பேசும் வீணர்கள் கூடத் தொல்காப்பியரைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு, 'இதோ, இவர்தான் தமிழின் கலங்கரை விளக்கம்' என்று கூத்தாடுகின்றனர். அந்தக் கலங்கரை விளக்கமாகிய தொல்காப்பியர், தம் இலக்கணத்தில் என்ன கூறியுள்ளார்? வட சொற்களை எடுத்து ஆளலாமே ஒழிய, வட மொழி எழுத்துக்களை வடிகட்டித் தூக்கி எறியவே வேண்டும் என்று கூறுகிருர்.

"வடசொல் கிளவி வடஎழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே"

என்பது அவர் விதித்துள்ள விதி.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னனே"

என்று புதுமை முரசு கொட்டிய நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் கூட, பிறமொழி எழுத்துக்களைக் கடன் வாங்குவதைத் தமது புதியன வற்றுள் ஒன்ருகக் கருத

(11-ம் பக்கம்)

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 2 | 1—10—55 | இதழ் 16

மூன்றாங் கட்டம்

தென்றல்! இந்தப் பெயர் தமிழார்வம் கொண்ட இளைஞர்களிடையே, தமிழ்க்கடலில் நீந்தும் புலவர்களிடையே, கொள்கைப் பற்றுக் குன்றாத திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களிடையே தினசரி உலவி வருகிறது. எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல், கண்டனக் கணைகளைப் பற்றிக் கவலைப் படாமல் தென்றலைக் கட்டிக்காத்து வளர்த்து வரும் ஆசிரியனுக்கு, தென்றலுக்கு இன்றைக்குக் கிடைத்திருக்கும் செல்வாக்கு பெருமையாகத்தானிருக்கிறது. யாருக்கு இருக்காது!

உயர் நீதிமன்ற விசாரணைக்காக நான்கு திங்கள் சிறை வாசத்திற்குப் பின் வெளிவந்தபோது, பத்திரிகை நடத்தவேண்டும் என்கின்ற ஆசை என்னைப் பிடித்திருந்தது. சிறையிலேயே அருமை நண்பர்கள் அடிக்கடி என்னிடம் அதை வலியுறுத்தியிருந்தனர். 'மாங்கனி' காவியத்தை எழுதி முடித்துப் படித்த அன்று, உடன் சிறையிருந்த அன்பர்கள் கவிதையிலேயே பத்திரிகை நடத்துமாறு கோரினார்கள். அந்த அளவுக்கு எனக்கு அருகதை இல்லை என்பதோடு, நாட்டிலே எவ்வளவு பேர் முழுக்க முழுக்கக் கவிதையாகப் படிக்க விரும்புவார்கள் என்ற ஐயமும் என்னை ஆட்கொண்டது! (ஆனால் இன்று கவிதையிலே பத்திரிகை நடத்த முடியுமென்றும், அதைப் பலர் படிப்பார்களென்றும், நண்பரும், கவிஞருமான சுரதா அவர்கள் நிரூபித்துள்ளது மகிழத்தக்கது.) ஆகவே, மற்ற பத்திரிகைகளைப்போலவே ஒரு பத்திரிகை நடத்த விரும்பினேன். அதற்கு நாலைந்து பெயர்களை நான் குறிப்பிட்டபோது நண்பரொருவர் "தென்றல்"என்ற பெயரை நினைவுபடுத்தினார். உடனே அதைவைத்து அனுமதிகோரி நீதிமன்றத்திற்கு எழுதினேன். பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் கொடுத்துவிட்டேன். ஆனால், அதன் பிறகும் ஒரு பயம் என் மனதைக்கவ்வியது. சுமார் எட்டாண்டு காலத்திற்கு மேல், பலபத்திரிகைகளில் பணி புரிந்து, காகிதத்திலேயே தூங்கி, "பணம் படைத்தவன் பத்திரிகை நடத்தினாலும் வறுமைதான் மிஞ்சும்" என்ற முடிவைக் கண்டவனாதலின், அதே தரித்திரத் தொழிலுக்குள் மீண்டும் நுழைய அச்சப்பட்டேன். பிறகு நண்பர்கள் கொடுத்த தைரியத்தின்பேரில் துவங்கினேன். துவக்கத்தில் நான் நிச்சயமாக நினைத்ததில்லை, இதழ்கள் இவ்வளவு அதிகமாக விற்பனையாகுமென்று. ஆனால், முன்னேற்றக்கழகக் குடும்பத்தின் பிள்ளைகள் பலரும் என்னை ஊக்குவித்து, உறுதியான நிலையிலே கொண்டுவந்து நிறுத்தியுள்ளனர்- இதற்கிடையிலே கவனிப்புக் குறைவினாலும், பத்திரிகைத் தொழிலின் வழக்கமான அமுக்கத்தினாலும், நியாயமான அளவிற்கு மேலே பக்கங்கள் கொடுக்கும் ஆசையினாலும், சுமார் எட்டாயிரம் ரூபாய்கள் வரை, நான் இழக்க வேண்டிவந்தது. ஆனாலும் தென்றலின் மூலம் கிடைத்த பல்லாயிரம் தோழர்களின் அன்பு, அந்த இழப்புக்கு ஈடுகட்டிவிட்டது.

வெளியூர்களுக்குப் போகின்ற நேரத்தில், ஆசிரியரின் உடல் நிலையைக் காட்டிலும் தென்றலின் உடல் நிலையை விசாரிப்பவர்கள் பலர். ஒவ்வொரு நேரங்களில் தென்றலுக்கு 'கோப நோய்' வருவதைப் பற்றி குறைப்படுவோர் பலர். தொடர் சித்திரங்களில் ஒரு சில இடையிலே துண்டிக்கப்படுவது பற்றி கவலைப்படுவோர் சிலர் இத்தனைக்கும் காரணம், அவர்கள் தென்றலுக்குத் தந்திருக்கும் உயர்ந்த இடம்தான் என்னும்போது, இந்தக் குறைகளைக் கவனிக்கவேண்டிய கடமை ஆசிரியனுக்குத் தானாக வந்து விடுகிறது. கடந்துபோன 67 இதழ்களில்—ஒரு சிலவற்றில் காணப்படும் குறைகள், நான் விரும்பியோ, விரும்பாமலோ நேர்ந்தவைதான், ஆயினும் அனைத்திற்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இந்த இதழிலேயிருந்து தென்றல் தன் பாதையில் சின்னவர்களைத் திரும்பியும் பாராது என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறேன். தொடர் சித்திரங்கள் துண்டிக்கப்படுவதற்குக் காரணம் பெரும்பாலும் இடமின்மைதான். ஆயினும் தொடர்கதையையோ, தொடர் நாடகத்தையோ கண்டிப்பாகத் துவளவிடமாட்டேன். மற்றவை, ஒரு இதழ்விட்டு ஒரு இதழ் என்ற கணக்கில் வெளிவரும். அப்போது தானே புதிய புதிய செய்திகளையும் தர முடியும்! இன்னும் சில வாரங்களுக்குப்பின், ஒரே தொடர்கதையைத் தவிர மற்றவை தொடரா வண்ணமும் சுருக்கமாக முடியும் படியும் கவனிப்பேன். வெண்பாப் போட்டி வழக்கம்போல்.

நான் மதுரைக்குச் சென்றிருந்தபோது டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களும் தியாகராசர் கல்லூரிப் புலவர்கள் பலரும் தென்றல் நடத்தும் வெண்பாப் போட்டிபற்றி ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சுமார் இரண்டாயிரம்பேர் வரை போட்டியில் கலந்துகொள்கிறார்கள் என்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றார்கள். "இலக்கியத் துறையில் மறைந்து வருவது வெண்பாத் துறைதான்: அதை மீண்டும் செழிக்கவைக்கும் முயற்சி யிது" என்றும் பாராட்டினார்கள். அலுவலகத்திலே ஒரு அறை வெண்பாக்களாலேயே நிரப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். பிரசுரமாகும் வெண்பாக்களில் ஒன்றிரண்டு, பிழைகொண்டு இயங்குவதாகச் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான வெண்பாக்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்போது ஒன்றிரண்டு பிழைகள் ஏற்படுவது இயற்கை. ஆயினும் அவ்வப்போது எடுத்துக் காட்டினால், இப்பகுதியை நடத்திச் செல்லும் தோழர் கண்டிப்பாகக் கவனிப்பார்

அடுத்து, தென்றலைப் புத்தக வடிவில் கொண்டுவரலாமா என்று தென்றல் எழுப்பியிருந்த வினாவிற்கு ஏராளமான தோழர்கள் பதிலளித்துள்ளனர். அவர்களில் ஐந்தே ஐந்து பேர்களைத்தவிர, மற்றவர்கள் புத்தக வடிவுக்கு ஆதரவாகவே எழுதியுள்ளனர். ஆனாலும் இருக்கின்ற வடிவமே போதும்" என்று குறிப்பிட்டுள்ள நண்பர்களின் கடிதங்களைத்தான் இப்போதைய நிலையில் கவனிக்க வேண்டியவனாயிருக்கிறேன். அதிலே ஒருவர் "சில பத்திரிகைகளின் வீழ்ச்சி வடிவ மாற்றத்தினால் ஏற்பட்டதுதான்" என்று குறிப்பிட்டிருப்பதே இதற்குக் காரணம். ஆயினும், இன்னும் சிலகாலம் கழித்து, வளர்ச்சித்திட்டத்தோடு புத்தக வடிவில் கொண்டுவரும் ஆசையிருக்கிறது.

நிற்க; இலக்கியப் போட்டியில் நாடகத்திலும், இலக்கியச்சுவையிலும் நண்பர்கள் அதிகக் கவனம் செலுத்தவில்லை என்பதைக்காணும் போது கவலைமேலிடுகிறது. ஆயினும் அவற்றை மீண்டும் நடத்தும் எண்ணமிருக்கிறது. தங்களது அளவுகடந்த வேலைகளுக்குள்ளும் நீதிபதிகளாயிருந்து பரிசிலித்த அறிஞர் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணதாசன்

சட்டக் கல்லூரியில் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் சமீபத்தில் சட்டக்கல்லூரியில் நீண்டதோர் விரிவுரையாற்றினார்கள். "ஒரு மாபெரும் சமுதாயத்தின் தலைவருக்குள்ள வீரத்தன்மையை ஓங்கியிருக்கும் அவர் தம் கரம் காட்டுகிறது.

படம் : 'தென்றல்திரை' சாமுவேல்.

வள்ளுவன் மூத்தோன்!

மீண்டும் ஒரு ஊடல் காண்போம். ஒரே முறையைப் பின்பற்றிக் கற்பனை செய்பவர்கள், அந்தக் கற்பனையை எந்த வகையில் கொண்டு போகிருர்களோ, அதுதான் அவர்களது மனப் பண்பாகவும், எடுத்துக் கொண்ட பொருட் பண்பாகவும், இயங்கும். இது இலக்கியச் சிந்தனை யுள்ள யாருக்கும் நன்ருகத் தெரிந்த உண்மை.

கவிஞனுக்கும் ஒரு வரம்பு உண்டு. வரம்பு கடந்துபோக அவன் ஆசைப்படும்போது பெருமைக்குரிய சில இயற்கை நெறிகளையும் அவன் மறந்துவிடக் கூடாது. அப்படி மறந்து விட்டால் அந்தக் கவிஞனது படைப்பிலே ஆண், பெண்மையோடும், பெண், ஆண்மையோடும் காட்சியளிக்க நேரும்.

பட்டப் பகலிலே, நடுவீதியிலே இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு, நிமிர்ந்த தலை நிமிர்ந்தபடி விரைப்பாக நடந்து, "என்ன வாத்தியாரே! என்ன சொல்றே?" என்று தனியிடத்திற்கு அழைக்கும் 'லம்பாடி'யாக கவிஞனது பெண் பாத்திரம் காட்சி யளிக்கக் கூடாது. நிறையழியும் நேரத்திலும் மாதர் தம் முறை யழியக்கூடாது—வள்ளுவனது காமத்துப் பால் முழுக்க நல்ல பக்குவத்தைக் காணலாம். நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய நிறை என்று சொல்லப்படும் கதவை, காமமாகிய கோடரி உடைக்கும் போதும், வள்ளுவனது திராவிடக் காதலி பசியெடுக்கும் குக்கல்போல பரக்கப் பரக்க வெளியே ஓட வில்லை, அப்போதும் எல்லையைத் தாண்டாமலே நிற்கிருள். மொத்தமாக மூன்ரும் பால் முழுக்க பாத்திர அமைப்பு பக்குவத்தோடு விளங்குகிறது. பெண்மை, தனக்குரிய இடத்தைவிட்டு ஓடி காமக் கடலிலே மூழ்க வில்லை. புலவிநுணுக்கப் பகுதியும் அதே வகையில் அமைந்துள்ளது. அதிலே மற்ருெரு பாடலைப் பார்க்குமுன், கம்பனுரின் இன்ருெரு பாடலைப் பார்ப்போம்.

ஓங்கி வளர்ந்த தென்னை மரத்திலுள்ள இளநீரை ஒருவன் பார்க்கிருன். எல்லாத் திராவிடக் கவிஞர்களின் தலைவர்களுக்கும், தலைவியரின் மார்பைக் காணும்போது இளநீர் உவமையாகத் தோன்றுவதைப் படித்திருக்கிருேம். இங்கு இளநீரைப் பார்க்கும்போது மார்பு நினைவுக்கு வருகிறது, கம்பனுரின் கதா பாத்திரத்துக்கு. உடனே அந்தக் கதாபாத்திரமான ஆண்மகன், தன்னை மறந்து, "ஆகா! என்ன ஆச்சரியம். இந்த இளநீர்கள் மங்கையரின் கொங்கைகள்போல் தோன்றுகின்றனவே!" என்று கூவுகிருன். மறைவிடத்து மாகவிஞன், கொங்கையுலகக் கோமகன் கம்பன் வழக்கம்போல இந்த இடத்திலும் நின்று, நிரவி ஆலாபனை செய்கிருன். அந்த இளநீரைப் பார்த்து, பொதுவாக "மங்கையரின் கொங்கைகள்" என்று தலைவன் கூறியதால், தலைவி கோபித்து ஊடுகிருள். "எந்த மங்கையரின் கொங்கைகள்?" என்று கேட்கிருள். தன் தனபாரத்தைத் தனியாகக் குறிப்பிடவில்லையே என்று அவளுக்கு ஆத்திரம் வருகிறது. "வேறு பல கொங்கைகளையும் நீர் கண்டுள்ளீரோ?" என்று கேட்கிற தோரணையில் ஊடுகிருள். இங்கே ஊடலுக்குக் கருப்பொருள் முழுக்க முழுக்கக் கொங்கையாகவே இருப்பதைக் காண்கிருேம்.

அந்தப் பாடல் இது :

செம்மாந்த தெங்கின் னிளநீரையொர் செம்மனேக்கி
அம்மாவிவை மங்கையர் கொங்கையி னுயவென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்ருெரேழை
விம்மா வெதும்பா வெயரா முகம் வெய்து யிர்த்தாள்.

—பூ. கொ. ப. 17.

பதவுரை : செம்மாந்த - ஓங்கி வளர்ந்த, தெங்கின் - தென்ன மரத்திலுள்ள, இளநீரை - இளநீர்க்காயை, ஓர் செம்மல் - ஒரு தலைவன், நோக்கி - பார்த்து, அம்மா - ஆச்சரியம், இவை - இவ்விளநீர்கள், மங்கையர் கொங்கையின் ஆய - மகளிரின் தனங்கள்போலத் தோன்றியுள்ளன, என்ன : என்றுகூற, (அது கேட்ட) ஓர் ஏழை - ஒரு பேதைமைக் குணமுடைய பெண் (அவன் காதலி) எம்மாதர் கொங்கைக்கு இவை ஒப்பாவன ?, என்று - என்று சொல்லி, வெதும்பா - மனங் கொதித்து, விம்மா - அழுது, முகம் வெயரா - முகம் வெயர்த்து, வெய்து உயிர்த்தாள்.

இனி வள்ளுவனைப் பார்ப்போம், அவனும் இதுபோன்ற ஒரு ஊடல் காட்சியைக் காட்டுகின்ருன். அந்தக் காதலியும் "வேறு பெண்களை உமக்குத் தெரியுமோ?" என்று கேட்கிருள். "அவளை நினைத்தபடி தானே என்னைப் பார்க்கின்றீர்?" என்றும் கேட்கிருள். கம்பன் காட்டிய ஊடல் நாடகம் போலவே ஒன்று நடக்கிறது. ஆனுல் இதற்கு மூலக் கதை கொங்கையல்ல. தலைவியின் அழகை அமைதியாக ரசித்தபடி பார்த்துக் கொண்டேயிருக்கிருன் தலைவன். "எவளை மனதில் எண்ணி என்னை ஈடுகட்டிப் பார்க்கின்றீர்?" என்று ஊடுகிருள் தலைவி. அவன் பார்த்தது அவளை. குறிப்பிட்ட கொங்கையை மட்டுமல்ல-முழு அவளை. அவள் கற்பித்துக் கொள்வதும் இன்ருெருத்தியை-இன்ருெருத்தியின் கொங்கையை அல்ல-முழு இன்ருெருத்தியை. இங்கே கற்பனை உருவ நயம் படைப்பதோடு ; நாகரிகமாகவும் இருக்கிறது.

கம்பனின் காதலி மிருகம்; வள்ளுவனின் காதலி பெண். காரணம் - முன்பு சொன்னதுதான் - இருவருள்ளும் இயங்கும் பண்புகள் வெவ்வேறு, முன்னது ஆரியப் பண்பு - பின்னது திராவிடப்பண்பு.

வள்ளுவனின் பாடல் இது :

" நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று "

—1320—

—கண்ணதாசன்.

பெரியார் எங்கேயிருக்கிருர் ?

பெரியார் திராவிட கழகத்திலிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது உண்மையல்ல. பெரியார் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தானிருக்கிருர். பெரியார் என்ருல் என்ன? நன்மை பயக்கத்தக்கதொரு சமுதாயக் கொள்கை, திட்டமாகச் சொல்லப்பட்ட பிரிவினைக் கொள்கை, கடமையுணர்ச்சி, இவைதான் பெரியார். அப்படிப் பார்த்தால், திராவிட கழகத்திலிருந்து முன்னேற்றக் கழகம் பிரிந்த போது, இந்த லட்சியங்கள் கூடவே வந்துள்ளன. மூன்றடி நீளமுள்ள தாடி, அழகான முகம் என்பதல்ல பெரியார். இந்தக் கொள்கைகளே பெரியார். ஆகவே பெரியார் முன்னேற்றக் கழகத்தில்தானிருக்கிருர்.

திராவிட கழகத்திலிருப்பவர் ஆசா பாசங்களுக்கும், கோபதாபங்களுக்கும் ஆளாகக்கூடிய ஈரோட்டு வேங்கடப்ப நாயக்கரின் மகன் இராமசாமி!

—ஈ. வே. கி. சம்பத்.

(பொதுக் கூட்டத்தில்)



எங்கணும் நீயே!

— தமிழ்ப்பித்தன் —

வானத்தில் தோன்றிவரு மீன்க ளெல்லாம்
வனிதையே உன்னழகை எடுத்துச் சொல்லும்!
கானகத்தில் களிக்கின்ற குயில்க ளெல்லாம்
கட்டழகி உன்குரலை எதிரொ லிக்கும்!
பாய்ந்தோடும் மானினந்தான் மகிழ்வா யங்கே
பயங்கொண்ட உன் பார்வை காட்டி நிற்கும்!
வேய்ங்குழலின் காதயதைக் கேட்கும் கன்று
வேகமுள்ள உன்னூளத்தை வடித்துக் காட்டும்!

கருமுகிலைக் கண்டுமகிழ் மயிலி னந்தான்
காதலியே உன்சாயல் சொல்லிக் காட்டும்!
பெருமையது கொண்டுறையும் அன்னக் கூட்டம்
பேரழகி உன் நடையைப் பேசிக் காட்டும்!
'அக்கா'வை அன்போடு அழைக்கும் கிள்ளை
அன்பரசி உன்னன்பை அறைந்து கூறும்!
எக்காளம் இட்டுவரும் அருவி நீர்-தான்
எழிலரசி உன்ஏற்றம் பாடி நிற்கும்!

சுந் : ஏன்? கவிதை நடையில் நான் பேசியது உனக்குப் பிடிக்க வில்லையா ?

மல் : சோழ நாடு முழுக்க கவிதை நடையில் தான் பேசுகிறார்கள் எல்லோரும் ! இதிலென்ன புதுமை ?

சுந் : ஆ ! எல்லோருமா ? அப்படியானால் வேறு பலரோடும் பேசிக் கொண்டிருந்தாயா ?

மல் : ஆம் !

சுந் : எப்பொழுது ?

மல் : தினசரி பேசுகிறேன் !

சுந் : இளைஞர்களா ? முதியவரா ?

மல் : இளைஞர்கள் சிலர் ; முதியவர் பலர்.

சுந் : ஐயோ ! என் செய்வேன் ! மல்லிகா ! முதியவர்களோடு முழுக்க முழுக்கப் பேசிக் கொண்டிரு ; ஆபத்தில்லை ! இளைஞர்களோடு பேசுகிறேன் என்கிறாயே...

மல் : (திரும்பி) நீங்கள் மட்டும் மற்ற பெண்களோடு பேசலாமோ ?

சுந் : எப்போது பேசினேன் ?

மல் : முந்தாநாள் நாம் சந்தித்த போது கவிதை நடையிலேயா என்னை வர்ணித்தீர்கள் ? இப்போது திடீரென்று எப்படி வந்தது அந்த எண்ணம்? நேற்று எவளையோ பார்த்து வர்ணித்திருக்கிறீர்கள். இன்று அதை என்னிடம் அப்படியே ஒப்பிக்கிறீர்கள்-இல்லையா ?

சுந் : (சிரித்த) அட பைத்தியமே ! அதைக் கேட்கிறாயா ? நேற்று கம்பர் எழுதிய இராமாயணத்தில் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். அது முதல் யாரைக் கண்டாலும் வர்ணிக்க வேண்டுமென்று ஒரு ஆசை.

மல் : (கோபத்தோடு) யாரைக் கண்டாலுமா ?

சுந் : (திடுக்கிட்டு) இல்லை. இல்லை, உன்னைக் கண்டால் மட்டும். வர்ணிக்கட்டுமா ?

[மல்லிகை தலை குனிந்தபடி நிற்கிறாள் நாணத்தோடு. அவள் முகம் சிவக்கிறது.]

சுந் : தொய்யில் மாமுலை மங்கையே ! நிதம்ப பாரத்து நேரிழையே ! பாந்தள் அல்குல் பசுங்கொடியே !

மல் : (கோபத்தோடு) சே ! சும்மாயிருங்கள் ! உங்களுக்கு மானம், வெட்கம் ஒன்று மில்லை ?

சுந் : இது என் வர்ணனையல்ல பெண்ணே ! கம்பரின் வர்ணனை. அவரிடம் போய்ச் சொல் இந்த வார்த்தையை.

மல் : அவருக்கும் வயசாக வயசாகக் கீழ்த்தரப் புத்தி தான் அதிகரிக்கிறது.

சுந் : அவருக்கல்ல-அயோத்தியின் மதுகை மாந்தர்களுக்கென்று அவர் சொல்கிறார்.

மல் : ம் ! அப்பா அப்படி ! மகன் இப்படி!

சுந் : எப்படி ?

மல் : அமராவதியின் சொற்படி ; காதல் உலகின் முதற்படி.

சுந் : அப்பாடி !

மல் : ஐயையோ ! உங்களிடம் சொல்லிவிட்டேனே ! நான் ஏதோ உளறி விட்டேன்.

சுந் : உளறு ! உளறு ! காதலில் கூட உளற வில்லையானால், வேறு எங்குதான் உளறுவது ?

மல் : ஐயோ ! நான் சொன்னதை மறந்து விடுங்கள்.

சுந் : ஏன் மறக்க வேண்டும் ! என் தமக்கை அமராவதி, அம்பிகாபதியைக் காதலிக்கிறாள். இவ்வளவு தானே ! இதிலென்ன இருக்கிறது ?

மல் : என்ன இவ்வளவு சாதாரணமாகக் கேட்கிறீர்கள் ?

சுந் : பின் என்ன செய்யச் சொல்லுகிறாய் ?

மல் : உங்கள் தந்தை இதை அறிந்தால் ?...

சுந் : தலையைக் கொய்து விடுவார் !

மல் : அதுவும் சாதாரணந்தானா ?

சுந் : ஆம் ! வேறென்ன ? காதலுக்காகச் செத்தவர்கள் தமிழ் நாட்டில் மிகவும் குறைவு. அந்த இடம் முதலில் என் தமக்கைக்குக் கிடைக்கட்டுமே...சரி ! அவர்களுக்குள் காதல் பிறந்த கதையை விபரமாகச் சொல் !

[இப்போது அந்த வழியே குதிரையில் வந்து கொண்டிருந்த வாணியன் தாதன், இவர்களைப் பார்த்து கீழே இறங்கி, ஒரு புதருக்குப் பின்னால் நின்று கவனிக்கிறான்.]

மல் : நேற்று முன் தினம் அம்பிகாபதி வந்தார். வழக்கம்போல் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது, இருவர் கண்களும் சந்தித்தன. இக்கட்டான நிலையிலே பிரிந்தார்கள். நேற்று மீண்டும் வந்தார். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அமராவதி அம்பிகாபதியின் முகத்தையே பார்த்தாள்.

[என்று சுந்தரசோழன் முகத்தைப் பார்க்கிறாள்.]

அம்பிகாபதி மெதுவாக அமராவதியின் கையைப் பற்றினார்.

[என்றதும் சுந்தரசோழன் மல்லிகையின் கையைப் பற்றுகிறான்.]

மல் : அப்படியே அமராவதியை மடியில் சாய்த்துக் கொண்டார்

[சுந்தர சோழன் மல்லிகையைத் தன் மடியில் சாய்த்துக் கொள்ளுகிறான்.]

மல் : பிறகு அமராவதியின் முகத்தில் முகம் வைத்து.......

[என்றதும் சுந்தரசோழன் மல்லிகையின் முகத்தில் முகம் வைத்து, அவளைப் பேசவிடாமல் இதழோடு இதழ் சேர்த்து, பூரிக்கிறான். அந்தக் காட்சியைக் கண்ட வாணியன் தாதன் வேகமாகக் குதிரையிலேறிப் பறக்கிறான்.]

—காட்சி முடிவு—

(தொடரும்)

கண்ணதாசன்

கல்லக்குடி மாகாவியம்

ஒரு வேண்டுகோள்

கல்லக்குடி மாகாவியத்தின் 'போர்புரி படலம்' பகுதியில் தோழர் இராம. சுப்பையா அவர்கள் கைது செய்யப் பட்டதுவரை தென்றலில் வெளிவந்துள்ளது. அடுத்த கட்டம், என் தலைமையிலே சென்ற அணியை 'போலீசார் தாக்கியதும், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும்' என வளரவேண்டும்-இதனையும் நானே எழுதுவதற்குத் தடையாக நியாயமான தன்னடக்கம் குறுக்கே நிற்கிறது. ஆகவே அந்தக் கட்டத்தை நண்பர்களே எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அது தென்றலில் வெளியிடப்பட வேண்டியிருப்பதால் கூடுமானவரை என்னைப்பற்றிய செய்திகளைக் குறைத்துக்கொண்டு, பொதுச் செய்திகளையே விரிவுபடுத்தி எழுத வேண்டுகிறேன். 15-10-55க்குள் அது கிடைக்குமானால், அந்த இதழில் வெளியிட முடியும். வெண்பாப் போட்டி நண்பர்களோ, மற்றைய கவிஞர்களோ தங்கள் பெயரில் இதைச் செய்ய வேண்டுகிறேன்.

அன்புள்ள,
கண்ணதாசன்.

சென்ற இதழ்களில்

காட்சி 1 : முடி கொண்ட சோழபுரத்தில் ஓர் தெருவின் வழியாக ஒரு கிழவன் வந்து கொண்டிருக்கிறன். காதலர்களை எல்லாம் 'காதலிக் காதீர்கள்' என்று எச்சரித்துக் கொண்டு வருகிறன். எதிரே ரதத்தில் வந்து கொண்டிருந்த ஒட்டக் கூத்தனைத் திட்டுகிறன். கூத்தன் வேகமாகப் போகிறன். அவனின் குதிரையின் கீழே விழுந்து விடுகிறன், தெருவில் உள்ளவர்கள் அந்தக் கிழவனை அஞ்சன வண்ணர் வீட்டிற்கு எடுத்துக் செல்கின்றனர், **காட்சி 2 :** கம்பன் இடுகாட்டில் நின்று கொண்டு தனியாகப் புலம்புகிறன், கொலையுண்ட தன் மகன் அமபிகாபதியை நினைத்து. புகழேந்தி அப்போது அங்கு வந்து கம்பருடன் பேசுகிறர். இருவரும் திரும்பி வரும்போது கிழவனின் சவம் எடுத்து வரப்படுவதைப் பார்க்கிறர்கள். **காட்சி 3 :** பள்ளியறையிலிருந்து எழுகின்ற குலோத்துங்க மன்னன் மனப் போராட்டத்தில் ஈடுபடுகிறன் 'காதலர்களைக் கொன்றவன்' என்று அவன் மனச்சாட்சி சுட்டிக்காட்டுகிறது, **காட்சி4:** குலோத்துங்க மன்னனின் மைந்தன் சுந்தர சோழனும், மல்லிகை என்ற தோழியும் காட்டு மண்டபமொன்றிலே காதல் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கிறர்கள், அப்போது நேற்குன்ற வாணர் வருகிறர். பின் மூவரும் புறப்படுகிறர்கள். **காட்சி 5:** இலக்கியக் கழகம் அம்பிகாபதி கொல்லப்பட்டு இருபத்தொரு நாட்களுக்குப் பின்னர் கூடுகிறது. கூத்தன், மாணுக்கன், வாணியன் தாதன், காட்டக் குடியார் ஆகியோர் தவிர, கழகப் பேரவையில் பெரும்பாலோர் அரசவை நிகழ்ச்சிகளில் கழக உறுப்பினர்கள் கலந்து கோள்வதில்லை என முடிவு செய்கின்றனர், **காட்சி 6 :** கூத்தனும் வாணியன் தாதனும் மன்னனைக் காண அரண்மனைக்கு வருகின்றனர், மன்னன் வெளியே போயிருக்கிறன்,என்பதை ஒரு முதியவர் மூலம் தெரிந்து கொண்டு திரும்புகின்றனர்.

காட்சி7: காட்டில், ஒரு குடிசையில் நேற்குன்றவாணர், சுந்தர சோழன் மல்லிகை மூவரும் இருப்பதைக் காணுகின்றனர் மன்னனும் அமைச்சரும். அவர்களின் உரையாடலைக் கேட்கின்றனர். நேற்குன்றர் சொல்ல, சுந்தர சோழன், கம்பன் அம்பிகாபதியை இலக்கியக் கழகத்தில் உறுப்பினராகச் சொல்வதிலிருந்து நாடகத்தைத் துவங்குகிறன். **காட்சி 8 :** (**திருப்புக் காட்சி**) கம்பனும் அம்பிகாபதியும் இலக்கியக் கழகத்திற்குப் புறப்படும்போது சடையப்பரும், இணையாரமார்பரும் வருகிறர்கள். உரையாடலை முடித்துக் கொண்டு எல்லோரும் புறப்படுகிறர்கள், **காட்சி 9 :** அந் நால்வரும் இலக்கியக் கழகத்திற்குள் நுழைகின்றனர். ஏகம்பவாணரும் நுழைகிறர். அம்பிகாபதி அவருக்கு வணக்கம் சொல்ல, அவர் அவனைக்கட்டிப் பிடித்துக் கோள்கிறர். அம்பிகாபதியிடம் பவணந்தி ஏடு ஒன்று தந்து கைச்சான்று பெறுகிறர். எல்லோரும் அம்பிகாபதியை வாழ்த்துகின்றனர்.

காட்சி 10 : அந்தப்புரத்தில் உப்பரிகையில் அமராவதியும் மல்லிகையும் காதலைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறர்கள், அப்போது அங்கே வந்த சுந்தரசோழனும் அந்தப் பேச்சில் கலந்து கொள்கிறன், **காட்சி 11** ; அந்தி நேரத்தில் ஆற்றங் கரைக்கு வந்து நிற்கும் அம்பிகாபதியின் இதயத்திலே பல எண்ணங்கள் தோன்றுகின்றன. அப்போது செம்பியன் நாட்டாரும், அரும்பாக்கத்து அருணிலை விசாகரும் அங்கு வந்து இலக்கியக்கழகத்தில் கம்பருக்கு உள்ள எதிரிகளைப் பற்றிச் சொல்லி எச்சரித்துப் போகிறர்கள், **காட்சி 12** : அரண்மனையில் அமர்ந்திருக்கும் குலோத்துங்கனிடம், அவனது ராஜகுரு ஈஸ்வர சிவன், இராமாயணத்தைத் தமிழிலே கம்பனைக் கொண்டு பாடச் செய்ய வேண்டும் என்று சொல்கிறர். மன்னன் இலக்கியக் கழகத்தை அரசவையில் கலந்து கொள்ள அழைப்பு விடுகிறன், **காட்சி 13 :** அமராவதியிடம் மல்லிகை. அவ்வையாரின் வருகை பற்றியும் அவரது வரலாறு பற்றியும் கூறுகிறர். அமராவதி அவ்வையாரைப் பார்க்க விரும்புகிறள், **காட்சி 14** ; அரசவையில் ராஜகுரு பேசி முடித்த பின்னர் குலோத்துங்கன், இராமாயணத்தை தமிழில் பாடவேண்டுமேன்று கம்பரைக் கேட்கிறன், அம்பிகாபதி தடுத்தும், கம்பன் பாட ஒப்புக் கோள்கிறன். அம்பிகாபதி கோபம் கொண்டு வேளியேறுகிறன். இதையெல்லாம் உப்பரிகையிலிருந்து அமராவதி பார்த்துக் கொண்டிருக்கிறள் **காட்சி 15 :** அவைக்களத்திலிருந்து மனவருத்தத்தோடு வந்து கொண்டிருந்தஅம்பிகாபதியைஎதிரில் வந்து கொண்டிருந்த ஆய்தேவி, அவ்வையார், முத்தரசப்பர் முதலியோர் பார்த்து, தங்களுடன் ரதத்தில் அழைத்துச் செல்கின்றனர் **காட்சி 16 :** புகழேந்தி சடையப்பன் ஏகம்பவாணன்ஆகியோருடன் கம்பன்தன் வீட்டில்இருக்கிறன்ஏகம்பவாணரும் புகழேந்தியும் தடுத்தும்கம்பன்தான் இராமகதையைப் பாடப் போவதாகத் தெரிவிக்கிறன், ஏகம்பவாணர் வெளியேறுகிறர், **காட்சி 17:** ஆய்தேவி இல்லத்தில் அம்பிகாபதி அவ்வையார் எல்லோரும் இருக்கும் போது அமராவதியும் மல்லிகையும் அங்கே வருகின்றனர். மல்லிகை அமராவதியை அவ்வையாருக்கு அறிமுகம் செய்கிறள். உடன் அங்கிருந்துபுறப்பட்ட அம்பிகாபதியைப் பார்த்து வணக்கம் தெரிவித்து அவனது தமிழ்ப்பற்றுக்கு நன்றி தெரிவிக்கிறள் அமராவதி. **காட்சி 18 :** கம்பன் இராமகாதை எழுதுகிறன். அவனுக்கு எதிரே அமர்ந்திருக்கும்: ஈஸ்வர சிவன் கம்பனின் அவையடக்கப் பாடலை நீக்கச் சொல்ல கம்பன் மறுத்து விடுகிறன், அவர் ஆத்திரம் கொண்டு வெளியே போகிறர். **காட்சி 19:** தனி அறையில் உள்ள குலோத்துங்கனைப் பார்க்க அமராவதி வருகிறள்.

தான் கவிதை கற்க வேண்டுமென்றும், அம்பிகாபதியை தனக்குக் கவிதை சொல்லித்தர வழி செய்ய வேண்டும் என்றும் அவனைக் கேட்கிறள் மன்னனும் சரி என்று சொல்லி விடுகிறன் **காட்சி 20 :** ஒட்டக்கூத்தன் தன் இல்லத்தில் இருக்கிறன், வாணியன் தாதன் அங்கு வந்து அம்பிகாபதி அமராவதிக்குக் கவிதை சொல்லித்தரப் போகும் செய்தியைத் தெரிவிக்கிறன், **காட்சி 21** ; அம்பிகாபதி பாடத்தைக் துவங்குகிறன், அமராவதியின் ஐயங்களைத்தீர்க்கிறன். வட மொழி மரபு வேறு-தென்மொழி மரபு வேறு என்பதை விளக்குகிறன், உரையாடல் நீடித்து விடுகிது. அவன் பாடுகிறன். அவள் ஆடுகிறள், அப்போது மன்னன் அங்கு வந்து கம்பர் படுத்த படுக்கையாய் இருக்கும் நிலையைத் தெரிவிக்கவே மூவரும் கம்பரைப் பார்க்கப் போகிறர்கள். **காட்சி 22** : கம்பன் படுக்கையில் கிடக்கிறன். ஆய்தேவி முத்தரசப்பர் முதலியோர் எதிரே இருக்கின்றனர். அப்போது மன்னன் அமராவதி அம்பிகாபதி ஆகியோர் வருகிறர்கள். அம்பிகாபதியை கம்பர் தழுவிக் கொள்கிறர். மன்னனின் வேண்டுகோள்படி அம்பிகாபதி கம்பருடனே இருக்கிறன், **காட்சி23** கூத்தன் தன் இல்லத்தில் இருக்கிறன், வாணியன் தாதன் அங்கு வந்து கம்பரும் அம்பிகாபதியும் ஒற்றுமை யாகிவிட்ட செய்தியைத் தெரிவிக்கிறன். **காட்சி 24** : அம்பிகாபதி அமராவதிக்குப் பாடம் சொல்லித்தருகிறன். அகத்துறை பற்றி அமராவதி கேட்க உரையாடல் அதிகரித்து விடுகிறது. அம்பிகாபதியின் மனமும் நிலையும் தடுமாறுகின்றன, 'வருகிறேன்' என்று சொல்லி கொண்டே அங்கிருந்து வேகமாகப் புறப்படுகிறன், அசைவற்று நிற்கின்ற அமராவதியைக் கண்ட தோழி மல்லிகை அவளை அழைத்துப் போய் படுக்கையில் படுக்க வைக்கிறள், பாட்டுப் பாடி அவளைத் தூங்க வைக்கிறள். **காட்சி 25 :** அமைதி இழந்த அம்பிகாபதி ஆற்றங்கரை சென்று திரும்பி வந்து கொண்டிருக்கும் போது தன் தந்தை ஒரு கைக்களவன் வீட்டிற்குள் சென்று அவன் மனைவியுடன் உறவாடுவதையும் அதைக் கண்ட கைக்களவன் கம்பரைத் துரத்துவதையும் காண்கிறன். துரத்தப்பட்ட கம்பர் அம்பிகாபதியின் முன்னுல் வந்து நிற்கிறன், கம்பரைக் கடிந்து சொல்கிறன். அம்பிகாபதி கோபம் கொண்ட கம்பர்வேகமாகப் போகிறர் **காட்சி 26** ; மல்லிகையும் அமராவதியும் உரையாடிக் கொண்டிருக்கும் போது அம்பிகாபதி வருகிறன், அவன் முந்திய நாள் தன் தந்தை நடந்து கொண்ட விதத்தையும் அதனுல் தான் உறக்கமின்றி வாடியதையும் சொல்கிறன் பின்னர் அவர்கள் உரையாடல் தொடர்கிறது, அம்பிகாபதி தன்னையும்அறியாமல் அமராவதியின் முகத்தை தொடுகிறன் அவளும் தன்னை மறக்கிறள். இந்த நேரத்தில் தோழி மல்லிகை மன்னவர் வரும் நேரம் என்று எச்சரித்து அம்பிகாபதியை அனுப்புகிறள்.

களம் : 27

காட்சி : 27

இடம் : ஆற்றங்கரை.

நேரம் : மாலை

[ஆற்றங்கரையில் தனித்து நின்றபடி யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறள் மல்லிகை. ஒரு குதிரையில் வேகமாக வருகிறன் இளவரசன் சுந்தர சோழன். பார்க்காதவள் போல் முகத்தைத் திருப்பிக்கொண்டு, ஒரு கொடியைப் பிடித்தபடி நிற்கிறள் மல்லிகை. பின்னுல் வந்த சுந்தர சோழன்.]

சுந் : குனிந்ததலை நிமிராத கோதையே! குவளை விழி எழில் கூட்டும் பாவையே! தனிமையிலே இனிமை என்ன கண்டாய்? என்னைக்காண மனமில்லையோ, தலை திருப்பிக் கொண்டாய்! பூத்த முகம் காணவந்தேன், புறங் கூந்தல் கண்டேன்! பொங்கி வரும் மது மலரின் மணம் நுகர்ந்து கொண்டேன்! சிதனத்து இளங்குமரி! இப்பக்கம் திரும்பு! இல்லை யெனில் கருகி விடும் காதலெனும் அரும்பு!

மல் : போதும்! பேசாமலிருங்கள்!

[என்று நாலடி பின்னுல் போகிறன். அவள் முன்னுல் போகிறன் சுந்தர சோழன்.]

(5-ம் பக்கம் பார்க்க)

வேலங்குடித் திருவிழா

-பாலகாண்டம்-

1

குலமுறை கிளத்து படலம்.

''எந்தஊர் என்றீர், இருந்தஊர் நீர் கேளீர்
அந்த ஊர்ச் செய்தி அறியீரோ?............''

—தனிப்பாடல்

''இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துரு வாங்க, சீக்கிரம் சமுக்காள மெல்லாம்எடுத்துப் போடு,'' என்று மனைவி மங்கையர்க்கரசியை அவசரப் படுத்தினார் கணவர் சின்னப்பபிள்ளை.

''கொஞ்சந்தான் பொறுங்களேன்! நான் ஒருத்தி என்னதான் செய்ய முடியும்?'' என்று சலித்துக் கொண்டாள் மங்கையர்க்கரசி.

''அவங்கெல்லாம் வந்திருக்கிற போது தான் சமக்காளம் விரிக்கிறதா?'' என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தார், பிள்ளை. ''கொஞ்சந்தான் நிக்கட்டுமே, என்ன கெட்டுப்போச்சு'' என்று சட்டசபைக் கணக்கில் பதில் சொல்லி விட்டு, யானை அசைந்தாடுதல் போல் உள்ளே சென்றாள் மங்கையர்க்கரசி.

சின்னப்பபிள்ளை என்றால் புதுக்கோட்டை வட்டாரத்தில் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனாலும் அவர் முப்பதாண்டு காலத்திற்கு மேல் அங்கு தான் வசித்து வருகிறார். தானுண்டு, தன் வேலையுண்டு என்று தன் வீட்டிலேயே கிடப்பார். அத்தி பூத்தது போல் வயல் பக்கம் போய் தனது இருபது ஏகரா நிலத்தையும் சாடையாகப் பார்த்து விட்டு வருவார். பூர்வீகச் சொத்துக்கள் ஏராளம். அவற்றிலே நகை பாதி; வங்கியிலே கிடக்கும் பணம் பாதி. ஊரிலே அவரைத் தெரிந்த ஒரு சிலர், அவரை அடைக்கோழிச் சின்னப்ப பிள்ளை என்பார்கள். அவர் மனைவி மங்கையர்க்கரசி திருமயம் சேக்கப்பபிள்ளையின் ஒரே புதல்வி. ஒரு வரவுக்கு ஒரு செலவு எழுதி, கணக்கைச் சரிக்கட்டிய குடும்பங்களில் சேக்கப்பபிள்ளையின் குடும்பமும் ஒன்று. அதாவது, மங்கையர்க்கரசி பிறந்ததும், அவளுடைய தாய் இறந்து விட்டாள். சேக்கப்பர் தன் ஒரே மகளைக் கண்ணும் கருத்துமாகப் பாது காத்து வந்தார். 'புருஷனுக்குக் கடுதாசி எழுதத்தெரிகிற வரைக்கும்' மகளைப் படிக்க வைத்தார். பெண்கள் அதிகம் படிக்கக்கூடாது, படித்தால் புருஷனுக்கு வளைந்து கொடுக்கமாட்டார்கள் என்பது அவருடைய சித்தாந்தம். புத்தனுக்குப் போதி மரத்தடியில் உதயமான ஞானத்தை விட, இந்தச் சித்தாந்தம் பெரியது என்பது அவரேதனக்குள் செய்து கொண்ட முடிவு. படிப்பு அதிக மில்லாமலே தன் மகள் பனை மரம் மாதிரி நிமிர்ந்து நிற்கக் கூடியவள் என்பது அப்போது அவருக்குத் தெரியாது. தாயில்லாவிட்டாலும் மங்கையர்க்கரசி உறுதியாக வளர்ந்தாள். சின்ன வயதிலேயே ஊரிலே உள்ள பெண்களுக்குள் சிண்டு முடித்து விடுவதும், மீறிப் போனால் திருடுவதும் அவள் கைக்கொண்ட ஆயுதங்கள். அதனாலேயே பருவம் வந்து ஐந்தாறு ஆண்டுகள் வரைக்கும், வயது வந்த பையன்களின் பெற்றோர்கள் அந்த வீதிவழியே வரவே பயப்பட்டார்கள். கடைசியில். எப்படியோ சின்னப்பபிள்ளையின் தலையைத் தடவி, தன் மகளை அவர் தலையில் கட்டினார் சேக்கப்பபிள்ளை. சேக்கப்பபிள்ளைவீட்டின் பக்கத்துவீட்டுக்காரர்கள் அந்த நாளை சின்னப்பபிள்ளையின் துக்க நாளாகக் கொண்டாடினார்கள், அவ்வளவு அவதிப்பட்டிருந்தார்கள் மங்கையர்க்கரசியின் திருவாய் மொழியில். யாராவதுஒரு ஆடவன் தற்செயலாகஅவளைப்பார்த்தாலும் பொழிந்து தள்ளுவாள் ''முழியைப் பார் முழியை! அந்த முழியிலே நெருப்பை அள்ளிக் கொட்ட'' என்று இடைவிடாமல் பாடுவாள். சில சமயங்களில் அந்தப் பாட்டின் தாளம் துரித காலத்திலும் போவதுண்டு. இதில் அடிக்கடி அவதிப்பட்டவர்கள் அடுத்த வீட்டுக்காரர்கள்தான். அதனால் தான் சின்னப்பபிள்ளைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் துக்க நாள் கொண்டாடினார்கள். தங்கள் வரைக்கும் விடுதலை நாள் கொண்டாடினார்கள்.

மங்கையர்க்கரசியை மண முடிக்கும் போது, சின்னப்பபிள்ளையின் தலை அரைக்கீரை விதைத்தைலம் விட்டு, அருமையாக வளர்க்கப்பட்ட கிராப்புத் தலையாக இருந்தது நாளாக, நாளாக அந்தத்தலையிலே பல ''பொட்டல்கள்'' தோன்ற ஆரம்பித்தன. நாளடைவில் அந்தப் 'பொட்டல்கள்' ஒரு பக்கம் 'புட்பாலும், ஒரு பக்கம் 'பாட்மின்டனும்', விளையாடக்கூடிய அளவில் வளமாக வளர்ந்தன.

விடுதலை பெற்ற புதுக்கோட்டை போல் வெறிச்சிட்டுப்போன அந்தத் தலைக்குக் காரணம், மங்கையர்க்கரசியின் கை பலம் தானென்று அந்த ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள். இதற்கிடையிலும் அவர்கள் கணவன் மனைவியாகக் காதல் வாழ்க்கை வாழ்ந்து, மூன்று குழந்தைகளை ஈன்றெடுத்தார்கள். மத்தியானம் சண்டை போடுவது போலத்தான் இரவிலும் சண்டை போடுவார்கள் என்று ஊரிலே இருந்த அபிப்பிராயத்தை அவர்களுடைய 'ஜனனமகாத்மியம்' மாற்றியமைத்தது.

மூத்தது ஆண்குழந்தை; பெயர் சுந்தரம். இரண்டாவது பெண் குழந்தை, பெயர்இந்திரா. மூன்றாவதும் பெண் குழந்தை; பெயர் கமலம்.

சுந்தரம் மேலைச்சிவபுரி தமிழ்க் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். இந்திரா சின்ன வயதிலே பள்ளிக்கூடம் போய் வாத்தியார் திட்டுகிறார் என்று திரும்பி வந்து விட்டாள். கமலம் புதுக்கோட்டையிலேயே எஸ். எஸ். எல். சி. வரை படித்து, அதிகம் படிக்கக்கூடாது என்ற தாய் வழிப்பாட்டனின் தத்துவப்படி வீட்டிற்கு வந்துவிட்டாள்.

இருவரும் ருதுவாகியிருந்தனர். மாப்பிள்ளை வேட்டையில் ஈடுபட்டார் சின்னப்பபிள்ளை. மங்கையர்க்கரசி வீர தீரம் படைத்தவள் என்று கேள்விப்பட்டிருந்ததாலும் இந்திரா அட்டைக்கரி போன்ற கருப்பு, அதிலும் படிக்காதவள் என்று தெரிந்திருந்ததாலும், சின்னப்பபிள்ளையின் மாப்பிள்ளை வேட்டை காட்டைக் கலைத்ததுடன் நின்று விட்டது.

இந்த நிலையில் மேலைச்சிவபுரியிலிருந்த சுந்தரம், ஒரு மாப்பிள்ளையைப் பற்றி சின்னப்பபிள்ளைக்குக் கடிதம் எழுதினான். பால நாயகம் என்ற அந்த மாப்பிள்ளையின் பெயரை பாலன் என்று சுருக்கமாக அழைப்பார்கள் அவனுடைய பெற்றோர்களான சொக்கப்ப பிள்ளையும், மீனாட்சியும்.

பாலன் ஒரு பெரிய எழுத்தாளன். ('பெரிய' என்பது அவனே சொல்லிக் கொள்வது.) சென்னையில் நடந்த இலக்கியப் பத்திரிகையொன்றில் அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சொக்கப்பபிள்ளையும். மீனாட்சியும் அபூர்வமாக வாய்த்த தம்பதிகள். அடக்கம், ஒடுக்கம், தர்ம குணம் என்று எத்தனை அடுக்கினாலும், அத்தனைக்குள்ளும் அவர்கள் அடங்குவார்கள்.

சுந்தரம் அங்கே அடிக்கடி போய் வருவான். அவர்களைத்தாய் தந்தையராகவே பாவிப்பான். அடிக்கடி சென்னையிலிருந்து வீட்டிற்கு வரும் பாலனையும் அறிமுகப்படுத்தி அவன் பழகிக் கொண்டான். பாலனை அவனுக்கு மிகவும் பிடித்தது. அதோடு, அவன் கொஞ்சம் தற்பெருமைக்காரன் என்பதையும் அவனால் உணர முடிந்தது. எப்படியாவது தன் தங்கை இந்திராவை பாலனுக்குக் கட்டி வைக்க வேண்டும்; அந்த உறவை முடிவற்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவனது தீராத ஆசை.

சுந்தரம் தன் குடும்ப வரலாறு முழுவதையும் சொக்கப்ப பிள்ளைக்கும், மீனாட்சிக்கும் சொல்லியிருந்தான். அதிலே, அந்தக் குடும்பத்தின் மீது அவர்களும் அனுதாபப் பட்டவர்களாயிருந்தார்கள். அந்த வரலாற்றைச் சொல்லி முடித்ததும், ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்று முத்தாய்ப்பு வைத்திருந்தாள், மீனாட்சி. அதை நினைவு கொண்ட சுந்தரம், இந்திராவின் திருமணம் சம்பந்தமாகப் பாலனிடம் பேசுவதைக் காட்டிலும் பெற்றோரிடம் பேசுவது பலன்

தரும் என்று கருதி, மெதுவாகச் சொக்கப்பரிடம், பேச்சைத் துவக்கினான். அவரும் அதை எதிர்பார்த்தவர் போல ஆமோதித்துக் கொண்டு வந்தார். பெண் கருப்பு என்பதையும், படிக்கவில்லை என்பதையும் சுந்தரம் முன் கூட்டி சொல்லியிருந்தானுகையால், சொக்கப்பர் சற்று யோசிக்க ஆரம்பித்தார். அந்த யோசனையும், அவருக்கு விருப்ப மில்லாமையால் ஏற்பட்ட யோசனையல்ல, பாலன் என்ன சொல்வானோ என்ற பயம். கடைசியில் அவர் தன் மனைவி மீனாட்சியைக் கலந்து, தீவிரமான ஒரு முடிவுக்கு வந்தார். எப்படியும் சின்னப்ப பிள்ளையின் குடும்பத்தோடு சம்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று துணிந்தார். சுந்தரத்தைக் கூப்பிட்டு ஒரு மணி நேரம் தனியாகப் பேசினார். உடனே தன் மகன் பாலனுக்கு, புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதினார். சுந்தரம் தன் பெற்றோருக்கு "வெள்ளிக் கிழமையன்று பெண் பார்க்க வருகிறார்கள்; நானும் வருகிறேன்" என்று கடிதம் எழுதினான். தன் தங்கைக்கு மண முடியப்போவதிலே அவனுக்குத் தாளாத மகிழ்ச்சி. அப்போதும் அவன் இதயத்திலே ஒரு மூலையில் ஏற்பட்ட பயம், சொக்கப்ப பிள்ளையையும், மீனாட்சியையும் நினைத்துக் கொண்டதால் தணிந்தது.

பாலனும் புறப்பட்டு, மேலைச்சிவபுரி வந்து சேர்ந்தான். எல்லோரும் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டார்கள் அவர்கள் வரப்போகிறார்கள் என்ற அவசரத்தில் தான் சின்னப்ப பிள்ளையிருந்தார். அதற்குத் தான் சட்டசபைக் கணக்கில் பதில் சொன்னாள் அவர் மனைவி.

2

கோலங்காண் படலம்.

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே-ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது

——நள வெண்பா.

வாசலிலே கார் வந்து நின்றது. எல்லோரும் இறங்கினார்கள். "வாருங்கள், வாருங்கள்" என்றபடி சின்னப்பபிள்ளை முன்னும் பின்னும் வேகமாக ஓடினார்; மங்கையர்க்கரசி தன்னால் முடிந்த அளவு வேகமாக ஓடி, சமுக்காளத்தை விரித்தாள். வெற்றிலைத் தட்டை எடுத்து வைத்தாள். "டேய் மூக்கையா, மூக்கையா" என்று குரல் கொடுத்தாள். "காபி பலகாரம் தயாராகி விட்டதா?" என்று பொது விலே கேட்டாள். சம்பந்திமார் உள்ளே வரப் பார்த்து, மேலாடையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, பின் கட்டுக்கு ஓடினாள். உள்ளே வந்தசொக்கப்பர், மீனாட்சி, பாலன் ஆகியோர் விரிப்பில் அமர்ந்தனர். சுந்தரம் பின்கட்டுக்குச் சென்றான். "அண்ணா!" என்று ஆவலாக வந்தாள்இந்திரா. அவள் முகம் களையில்லாமலிருந்தது. மெதுவாக அவளிடம் பேசினான் சுந்தரம். பிறகு தாயிடமும் போய் ரகசியம் பேசினான். அவள் கைகாலை ஆட்டி, சப்த மில்லாமல், கற்கால மனிதர்களைப் போல் சைகை காட்டினாள். "சரி, சரி! அலங்காரம் சீக்கிரம் ஆகட்டும்" என்று கூறி விட்டு, முன் பக்கம் வருவதற்காக நடந்தான். அப்போது எதிரே வந்த தந்தை சின்னப்ப பிள்ளை யோடும் சைகையில் பேசினான். உள்ளே எழுந்து வந்தாள் மீனாட்சி. அவளும் சைகையில் பேசினாள். ஏதோ உலகமகாயுத்தத்திற்குத் தயார் செய்வது போல, பேச்சு நடந்தது. கடைசியில் எல்லோரும் சிரித்த முகத்தோடு வெளியில் வந்து உட்கார்ந்தார்கள். உள்ளேயே நின்ற மீனாட்சி, பெண்ணை அலங்கரித்து, மெதுவாக வெளியிலே அழைத்துக் கொண்டு வந்தாள். தலைகுனிந்து நின்ற அந்தப் பெண், ஒரு குடும்பப் பெண்ணின் முழு இலக்கணத்தையும் நினைவு படுத்தினாள். அந்த நாணத்தினாலும், அளவு மீறிய அலங்காரத்தினாலும் ஒரு புதிய அழகு, அவள் முகத்தில் காணப்பட்டது. கூந்தலில் வைக்கப்பட்டிருந்த மலர், அதை மிகைப் படுத்தி எடுத்துக் காட்டியது. அந்தப் பூவின் வாடையும், ஊதுபத்தியின் வாடையும் மனோதத்துவ முறையிலே பாலனைக் கவர்ந்தன. பெண்ணை இரண்டு முறை, முன் பின்னாக நடக்க வைத்து, சிரித்தபடி உள்ளே அழைத்துச் சென்றாள் மீனாட்சி, கையிலிருந்த வெற்றிலையை இரண்டு கைகளாலும் மாறி மாறித் தொட்டபடி, அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பாலன், அவள் உள்ளே சென்ற பிறகும் தன் நினைவு கொள்ளவில்லை. உள்ளே, காட்சிக்கு வைக்கப் பட்டுத்திரும்பிய மாடப் புறாவைப் பார்த்துப் பார்த்துப் பூரித்த மங்கையர்க்கரசி, திருஷ்டி கழிப்பதன் மூலம் திருப்திப் பட்டுக்கொண்டாள். மீனாட்சி மங்கையர்க்கரசியிடம் கண்ணடித்து, "எல்லாம் நல்லா முடியும்" என்று கூறி விட்டு, பின் கட்டுக்குள் ஒரு முறை பார்த்து விட்டுத் திரும்பினாள்.

வெளியிலே, சுந்தரம் பாலனிடம் "எப்படி?" என்று மெதுவாகக் கேட்டான். அப்போது, சின்னப்பரும் சொக்கப்பரும் வாசற்புறத்திற்குப் போய் பேசிக்கொண்டிருந்தார்கள். சுந்தரம் "எப்படி?" என்று கேட்டதும், பாலன்,

"வானத்து நிலவு தான் பூமிக்கு
வந்ததுவோ
வண்ணமலர் தான் கொடிமாறிச்
சேர்ந்ததுவோ
மோனத்துயிலிருக்கும்
முழுமதிக்குப் போட்டியதோ"

என்று பாடத் தொடங்கினான். "அப்பா, கம்பநாடா, நிறுத்து!" என்று அவனைத்தடுத்த சுந்தரம் முதுகில் தட்டி, தோளில் கை போட்ட வாறு சிரித்தான். "எப்படியானாலும் இந்த உறவு நீடிக்க வேண்டும்!" என்று அவன் அர்த்த மில்லாமல் கேட்டதற்கு, "நிச்சயம் நீடிக்கும்," என்று உறுதியாகப் பதிலளித்தான்.பாலன், பிறகு எல்லோரும் பலகாரம் சாப்பிட்டு விட்டு, சரியாகப் பதினாறுவது நாள் திருமணம் நடத்து வதென்று உறுதிப்பாடும் செய்து கொண்டு புறப்பட்டார்கள். தான் மறு நாள் வருவதாகவும், தான் வந்த பிறகு பாலன் சென்னைக்குப் புறப்படலாமென்றும் கூறி, அவர்களை வழியனுப்பி வைத்தான் சுந்தரம்.

எல்லோரும் சென்ற பின், உள்ளே வந்த சுந்தரத்தை "அண்ணா" என்ற குரல் எதிர் கொண்டழைத்தது. ஓடி வந்து அவன் கால்களில் விழுந்தாள் இந்திரா. "என் வாழ்வை வளப்படுத்தியவர்கள் நீங்கள் தானண்ணா" என்று அவள் வாய் முணு முணுத்தது. அவளை மெதுவாக எழச் செய்த சுந்தரத்தின் கண்களில் நீர் மல்கியது. கண்டிருந்த சின்னப்ப பிள்ளையின் கண்களும் இன்ப வேதனையால் குளமாயின.

"அக்கா!" என்று இந்திராவைக் கட்டிக் கொண்டாள் கமலா. அன்று அதிசயமாக மங்கையர்க்கரசியின் கண்களிலும் கண்ணீர் வந்தது. சுந்தரம் பையிலிருந்து ஒரு கத்தைக் கடிதங்களை எடுத்து, இந்திராவிடம் கொடுத்து, "இந்தாம்மா! எனக்கு வாழ்வில்லையா? வாழாவெட்டியாகத்தான் போக வேண்டுமா? என்று கமலத்தை எழுதச் சொல்லி அனுப்பியிருந்தாயே, அந்தக் கடிதங்கள்.உனக்கு வாழ்வு கிடைத்து விட்டது. அது வளமாகவுமிருக்கும். கவலைப் படாதே" என்று அவளைத் தேற்றினான்.

3

கடிமணப் படலம்

"காதலெனும் புத்தகத்தில் காகிதமே நீயாவாய்
காவேரி நதியெனவே காவியமாய் அவரிருப்பார்
உலகத்தில் பெருங்கதையே இதுதானம்மா-அட
உலகத்தில் பெருங்கதையே இதுதானம்மா"

—தீனாப் படப்பாட்டு

"இன்று திருமண நாள். இந்திராவின் வாழ்விலே மலர்ச்சியை உண்டாக்கும் நாள்," என்று தாளம் போட்டுப் பாடியது சுந்தரத்தின் மனது. ஆனாலும் அடிக்கடி ஏதோ ஒரு பயம் அவன் மனதில் வந்து வந்து போய்க்கொண்டிருந்தது. அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். உடம்பு அசைந்து கொண்டிருந்ததே தவிர, மனம் ஒரு நிலையில் இல்லை. வருபவர்களை வரவேற்பதற்குப் பதிலாக வீட்டிலுள்ளவர்களையே வரவேற்றான். தேங்காய் கேட்டால், தேன் குழல் கொடுத்தான். விளக்கேற்றச் சொன்னால், என்ன வேண்டுமென்று கேட்டான். "என் மேளம் வாசிக்க வில்லை?" என்று சமையல்காரனை அதட்டினான் "ஏன் சமைக்கவில்லை" என்று மேளம் வாசிப்பவனை விரட்டினான்.

இந்திரா அங்கு மிங்கும் பார்த்தபடி அலங்காரம் செய்துகொண்டிருந்தாள். அவள் முகம் முன்பிருந்ததை விட அதிகம் கருப்பாகியிருந்தது. குழந்தைகள் அங்கு மிங்கும் ஓடுவதும், பலூனை வெடிக்க வைப்பதும், தோரணங்கட்டு வோர் சுறு சுறுப்பாக நடப்பதும், மண மேடை அமைப்போர் பளிங்கு மணமேடையைத் தூக்கி வருவதும், 'பை எங்கே' என்ற சப்தமும், 'வெள்ளித்தட்டெங்கே' என்ற சப்தமும் மாறி மாறிப்பிறப்பதும், காணவும், கேட்கவும் இனிமைதருவதாக இருந்தன. மண வீட்டுக்கு இயற்கையாக உள்ள சகல ராகங்களும் அங்கே கேட்டன.

பெண்கள் ஓரிடத்தில் கூடியிருந்து பேசிய பேச்சு, மணவீட்டை சட்ட சபையாக்கியது. "மாப்பிள்ளையழைக்கணும். புறப்படுங்க, புறப்படுங்க" என்று அவசரப்படுத்தினார் ஒரு பெரியவர். மேளக் கோஷ்டியினர் "ராகம்" வாசிப்பதை நிறுத்தி "எப்படி வாழ்வேன் இனிமேல்" என்ற பாட்டையே வாசிக்க ஆரம்பித்தனர். எல்லோரும் புறப்பட்டார்கள்.

மாப்பிள்ளை ஒரு சத்திரத்துத் திண்ணையிலே வந்து இறங்கியிருந்தார். எல்லோரும் அங்கு போய்ச் சேர்ந்தார்கள். சின்னப்ப பிள்ளை மாப்பிள்ளைக்கு எதிரே போய் உட்கார்ந்து வழக்கமான சடங்குகளைச் செய்து முடித்தார். மாப்பிள்ளை எழுந்தார். வலது காலை முன்னால் வைத்து நடந்தார். எல்லோரும் மலர் தூவ, பெண் வீட்டை அடைந்தார்.

திருமண நேரம் வந்தது. மணமகளைக் கொண்டுவந்து மணவறையில் அமரச் செய்தார்கள். எதிரே உட்கார்ந்திருந்த அய்யர் குடுமியை அவிழ்த்துக் கட்டிக் கொண்டு, வயிற்று வலிக்காரனைப் போல் முணு முணுக்க ஆரம்பித்தார். அங்கு வந்திருந்த ஒரு அம்மாள், "கருப்பிக்கு எவ்வளவு அழகான மாப்பிள்ளை பாரேன்" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டினாள். ஒன்பது வருஷமாகத் தன் மகளுக்கு மாப்பிள்ளை தேடி அலுத்துப் போன தாய் அவள். "பெண்ணெங்கே? பெண்ணெங்கே?" என்று எல்லோரும் குரல் கொடுத்தார்கள். பெண்ணை மெதுவாக அழைத்து வந்தாள் பெண்ணுக்கு உறவு முறையான ஒரு கிழவி. பெண்ணை உட்காரவைத்தார்கள். தலைகுனிந்தபடி முகம் தெரியாமல் உட்கார்ந்திருந்தாள். அய்யர் தன் கடனைத் தீர்த்தார். தாலியை எடுத்து மாப்பிள்ளையின் கையில் கொடுத்தார். "கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்று அவர் குரல் கொடுக்க, எல்லோரும் எதிரொலித்தார்கள். "கட்டுங்கள் தாலியை!" என்றார் அய்யர், சுந்தரம், சின்னப்பபிள்ளை. மங்கையர்க்கரசி எல்லோரும் வெளிறிட்ட முகத்தோடு, பயந்தபடியே நின்று கொண்டிருந்தார்கள்.

மாப்பிள்ளை பாலன் தாலியைப் பெண்ணின் கழுத்தில் கட்டப்போனான். பெண்ணை நன்றாகக்கூர்ந்து பார்த்தான். திடுக்கிட்டான் "இல்லை; ஏமாற்றி விட்டார்கள். ஏமாற்றிவிட்டார்கள்.இந்தப் பெண் அல்ல நான் பார்த்தது!" என்று கத்தினான். எல்லோரும் திடுக்கிட்டார்கள். மேள வாசிப்பும் நின்றது.

தொடரும்

இலக்கியப் போட்டி முடிவுகள்

பெருங்கதைப் போட்டி ரூ. 500

முதற் பரிசு

	நூற்றலைப்பு		எழுதியவர்.
1.	கல்லக்குடி--		''இசையமுது'' 15-2, உப்பலவாடி தெரு. மஞ்சைநகர், கடலூர் N.T.
2.	தென்பாண்டி வீரன்	-	ப. நெடுமாறன், 291, மேலமாசி வீதி, மதுரை.

இரண்டாம் பரிசு

1.	நிலவொளியில்	-	இரா. விசுவநாதன், ராஜா டெக்னிகல் இன்ஸ்டியூட், நேதாஜி ரோடு, திருவாரூர்.
2.	கருகிய மலர்கள்	-	புதுமதியன், புதுப்பாளையம், கூடலூர் அஞ்சல், திருச்சிமாவட்டம்.

காவியப் போட்டி ரூ. 500

முதற் பரிசு

	நூற்றலைப்பு.		எழுதியவர்.
1.	பூங்குழலி	-	கி. கண்ணப்பன், கண்டாச்சிபுரம், தென்னுற்காடு மாவட்டம்.
2.	கொடிமின்னல்	-	கோ. பெ. நாராயணசாமி, கோனூர், சேலம் மாவட்டம்.

இரண்டாம் பரிசு

1.	பாரி முல்லை	-	அ. வேதாசலம், அறந்தாங்கி, தஞ்சை மாவட்டம்.
2.	காதல் துறவி	-	சி. தண்டபாணி, மே.--பா. இரா. ஜெனார்த்தனன், பி. எஸ். ஜி. பொறியியல் கல்லூரி, பீளமேடு, கோவை.

தோழரீர்.

தென்றல் அறிவித்திருந்த இலக்கியப் போட்டியின் நான்கு பிரிவுகளான பெருங்கதை, காவியம், இலக்கியச் சுவை, நாடகம் ஆகியவற்றில் பெருங்கதைப் போட்டியிலும், காவியப் போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விபரங்கள் மேலே வெளியிடப்பட்டுள்ளன. நாடகப் போட்டிக்கும், இலக்கியச்சுவைப் போட்டிக்கும் பரிசு வழங்கக்கூடிய தகுதியுள்ளவை ஒன்று கூட இல்லை என்பதை போட்டி நீதிபதிகள் வருத்தத்துடன் தெரிவிக்கிறார்கள். புலவர்களும், நாடக ஆசிரியர்களுமான நீதிபதிகள் **''நாடகத்தின் அமைப்பு முறையையே பலர் புரிந்து கொள்ளவில்லை''** என்று குறிப்பு வரைந்துள்ளனர். பெருங்கதைப் போட்டியில் மட்டும், நல்ல கதைகளாக நான்கினைத் தேர்ந்தெடுத்து விபரம் தந்துள்ளனர். காவியப் போட்டியிலும் பரிசுக்கு அமைப்பான நான்கு கிடைத்தது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

மேற்கண்ட இரு போட்டிகளுக்கும் முதற் பரிசுகளும் இரண்டாம் பரிசுகளும் இருவர் இருவர்க்கு பகிர்ந்தளிக்கப்படும். பரிசுபெற்றோரைத் தவிர, மற்றையோர் போதுமான தபால் தலைகள், அனுப்பி, தங்கள் கையெழுத்துப்பிரதிகளை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கோரப்படுகிறார்கள். ஏற்கனவே தபால் தலைகள் அனுப்பியோருக்கு 2—10—55ல் திருப்பியனுப்பப்படும்.

பரிசு வழங்கும் விழா 6—11—55 அன்று சென்னையில் நடைபெறும். விபரங்கள் பிறகு அறிவிக்கப் படும்.

நாடகப் போட்டிக்கு வந்தவற்றில் பிரசுரத்திற்குத் தகுதியானவை என்று இரண்டு நாடகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவை:—

	நூற்றலைப்பு.	எழுதியவர்.
1.	எதிர்க்கட்சி	நாகன், தமிழ் விரிவுரையாளர், க. செ. கல்லூரி, மேலைச்சிவபுரி, திருச்சி மாவட்டம்.

குடந்தையில் கண்ணதாசன்



18-9-55 ஞாயிறன்று குடந்தை துவரங்குறிச்சியில் 'தென்றல்' ஆசிரியர் கண்ணதாசன் பேசினார். சுமார் 15 ஆயிரம் மக்கள் ஆர்வத்தோடு கூடியிருந்து கேட்டனர். திராவிட கழகத் தோழர்களும் அமைதியாயிருந்து பேச்சை ரசித்தது குறிப்பிடத்தக்கது. முதலில் முக்கால் மணி நேரம் பேசிய தோழர் வளையாபதி முத்துக்கிருஷ்ணன், ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அநீதியையும், அணைகட்டுந் திட்டங்களின் புள்ளி விவரங்களையும் விளக்கி அழகாகப் பேசினார். அவரது பொருளாதாரப் பேச்சை அமோகமாக ரசித்தனர் குடந்தை மக்கள்.

அடுத்துப் பேசிய கண்ணதாசன் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி சுமார் இரண்டரைமணி நேரம் பேசினார். செயலாளர் பத்மநாதனும், தோழர். ராதாகிருஷ்ணனும் நாராயணசாமியும், மற்ற இயக்கத் தோழர்களும் வெகுவாக உழைத்தார்கள். கூட்டம் கடைசிவரையில் அமைதியாக நடந்தது.

மறுநாள் புவனகிரியிலும், அடுத்த நாள் சென்னையிலும் அதைத் தொடர்ந்து கரூருக்கு அடுத்துள்ள வேலாயுதம் பாளையத்திலும் கண்ணதாசன் பேசினார். புவனகிரிக் கூட்டத்தில் தோழர் வளையாபதி முத்துக்கிருஷ்ணனும் கலந்து கொண்டார். ஆற்றுப் படுகையில் நடந்த அந்தக் கூட்டம், மாற்றுக் கட்சியினரை மருள வைக்கும் அளவிற்கு மாபெரும் கூட்டமாக இருந்தது. அந்த வட்டாரம் முழுக்க முன்னேற்றக் கழகத்திற்கே ஆதரவாயிருப்பது நன்கு தெரிந்தது.

வேலாயுதம் பாளையத்தில் பேசுவதற்கு முன், ஐந்து மணிக்கு சேமங்கியிலும், 5-30க்கு கரப்பாளையத்திலும், ஆறுமணிக்குப் புகளூரிலும் கழகக் கொடிகளை ஏற்றி வைத்தார் கண்ணதாசன். வேலாயுதம் பாளையத்தில் கொட்டும் மழையிலும் ஆயிரக்கணக்காணவர்கள் கூடியிருந்து பேச்சை ரசித்தனர். சேமங்கி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'தென்றல்' வளர்ச்சிக்கு ரூ 1 ம் வேலாயுதம்பாளையம் தி. மு. க. சார்பில் ரூ 2 ம் கண்ணதாசன் வசம் கொடுக்கப்பட்டது.

படம் : சி. கணேசன்,
குடந்தை.

2.	ஆயிரம் ரூபாய்--	வ. பாலசுப்பிரமணியன், 1871, தெற்குத் தெரு, பள்ளியக்கிரகாரம், தஞ்சாவூர்.

இவை பிரசுரிக்கப்படும். மற்றபடி நாடகப் போட்டிக்கும் இலக்கியச் சுவைப் போட்டிக்கும் ஒதுக்கப்பெற்ற ரூபாய் ஆயிரத்தையும் மீண்டும் அதே போட்டிகளை நடத்தி, வழங்கத் தீர்மானித்திருக்கிறோம். அது விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கையெழுத்துப் பிரதிகளைத் திரும்பப்பெற தபால்தலை அனுப்புவோர், தயவு செய்து தங்கள் நூலின் தலைப்பு, முகவரி முதலியவற்றை விபரமாக எழுதியனுப்ப வேண்டுகிறோம். இதில் கலந்துகொண்ட அனைவருக்கும், பரிசு வழங்கச் சம்மதித்துள்ள பதிப்பகங்களுக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

போட்டி நிர்வாகிகள் :

பெருங்கதை	-க. நாராயணன்
காவியம்	-தமிழ்ப்பித்தன்.
நாடகம்	-எஸ். எஸ். தென்னரசு.
இலக்கியச்சுவை	-ஜி. நாகராஜன்.

கல்லக்குடிப் போராட்டத்தின்போது சிறைசென்று மீண்ட கலைஞர் மு. கருணாநிதிக்கு சென்னையில் நடைபெற்ற வரவேற்பு ஊர்வலத்தில் சிக்கிக்கொண்ட நிக்சனும், ஆவடி மாநாட்டில் கலந்து கொண்ட டிட்டோவும் எதிர்பாராது சந்தித்து, இந்தியாவின் நிலைகுறித்துப் பேசியதாகக் கற்பனை செய்து எழுதப்பட்டது இந்த உரையாடல் கட்டுரை. தென்றல்—திராவிட நாடு பிரிவினை மலருக்காக எழுதப்பட்டு, இடமின்மையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. —ஆ-ர்.—

பந்தலுக்கு வெளியே !

—: தென்னரசு :—

[ஒளிசிந்தும் பளிங்கு மாளிகை. ஒவ்வொரு நுழைவு வாயிலிலும் ஒரு ஜோடி வெண்புறாக்கள். உள்ளே, அமைதி விரும்பிகளின் மாநாடு நடைபெறுகிறது. யார் யாரோ பேசினார்கள் நேரு எப்போது பேசுவார், என்ன பேசுவார் என்று 'கைதூக்கு'ப் பேர்வழிகள் எதிர்பார்த்திருக்கிறார்கள் மாநாட்டுத் தலைவர் எழுகிறார், "மாநாடு இத்துடன் பகலுணவுக்குக் கலைகிறது. பிற்பகலில், இந்தியப் பிரதமர் பண்டித நேரு, பர்மியப் பிரதமர் நூ, ஆகியோர் பேசுவர்" என்கிறார். பிரதிநிதிகள் வெளியேறுகிறார்கள் புறாக்கூடு கலைகிறது, எதிர்பாராத விதமாக யூகோஸ்லாவாகியாத்தலைவர் டிட்டோவும், அமெரிக்கநாட்டு உதவித் தலைவர் நிக்சனும் சந்திக்கிறார்கள்.]

டிட்டோ : சந்திக்க வாய்ப்புக்கிடைத்தது ; மகிழ்ச்சி.

நிக்சன் : எனக்கும் நெடுநாட்களாக ஆசை தான்.

டிட்டோ : மாநாட்டின் முடிவு...

நிக்சன் : இறுதியில் தான் தெரியும்.

டிட்டோ : ஆம் ; நேரு பேசுவதைப் பொறுத்துத்தானே இருக்கிறது வெற்றி தோல்வி !

நிக்சன் : என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள் ! போர் தொடு என்று நேரு சொன்னால், மாநாடு தோல்வியில் தான் முடியுமா ?

டிட்டோ : அப்படியல்ல நான் செல்லுவது, நேருவுக்கு மாநாட்டில் செல்வாக்கு இருக்கிறது என்பதை மிகைப்படுத்திச் சொன்னேன். அவ்வளவுதான் !

நிக்சன் : அப்படி என்ன செல்வாக்கு இருக்கிறதென்று நினைக்கிறீர்கள். அந்நிய நாட்டில் யாருக்குத்தான் வரவேற்பிருக்காது ! நமக்கெல்லாம் வெளிநாட்டில் வரவேற்பும், செல்வாக்கும் இல்லாமாலா இருக்கிறது ?

டிட்டோ : அப்படியல்ல ; நேருவுக்கு வெளி நாட்டில் மட்டுமா செல்வாக்கு என்கிறீர்கள். இந்தியாவிலேயே அவருக்கு நல்ல செல்வாக்கு; நேருவைத் தெய்வமாகக் கருதுகிறார்கள். இது, பத்திரிகைச் செய்தி யென்று நினைத்து விடாதீர்கள். நேரிலே கண்டது.

நிக்சன் : எங்கே ; டெல்லியிலா ?

டிட்டோ : டில்லிக்குப் போயிருந்த போது, அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு ஆவடியிலே நடந்ததே அப்போது ! நேருவுக்கு என்ன வரவேற்பு ! என்ன ஆரவாரம் ! எவ்வளவு ஆதரவு ! அப்படிப்பட்ட மாநாட்டை இதுவரை நான் பார்த்ததே இல்லை. 'நேரு, என்றால், இந்தியா, இந்தியா என்றால்நேரு' என்றுதான இந்தியர்கள் எண்ணுகிறார்கள். நேருவுக்குச் சொந்த நாட்டில் கிடைக்கும் அந்த வரவேற்பைப் பார்த்தவர்கள, இங்கு அவருக்குத் தரும் பெருமையை மிகச் சாதாரணம் என்றுதான் கருதுவர் !

நிக்சன் : (சிரித்தார்-சிரிப்பில் வினயம் அரும்பு விடுகிறது)

டிட்டோ : என்ன சிரிக்கிறீர்கள் ? இது பொய் என்கிறீர்களா ? நூற்றுக்கு நூறு மெய் !

நிக்சன் : மன்னியுங்கள் ! நான் அப்படித்தான் நினைத்திருப்பேன் நானும் இந்தியாவுக்கு ஒரு முறை போய்ப் பார்த்திராவிட்டால் !

டிட்டோ : என்ன கண்டீர்கள் ? இந்தியாவில் நேருவுக்கு ஆதரவு இல்லை யென்று சொல்லுகிறீர்கள் !

நிக்சன் : ஆதரவு இல்லையென்றும் சொல்லவில்லை ; அதற்காக அவருக்கு அங்கு இருக்கும் எதிர்ப்பையும் மறைக்க விரும்பவில்லை.

டிட்டோ : விளக்கமாகச் சொல்லுங்கள்.

நிக்சன் : சொல்லுகிறேன். நிக்சன் பேசக் கூடாததுதான் ; நிக்சனின் அந்தஸ்துக்கு அந்த வாதம் அப்பாற்பட்டதுதான் என்றாலும் உங்களிடம் மட்டும் சொல்லுகிறேன். தயவு செய்து நீங்கள் வெளியே சொல்லிவிடாதீர்கள். இது வெடித்தால் இந்த மாநாடே விபரீதமாக முடிந்து விடக் கூடும்.

டிட்டோ : எனக்கு ஒன்றுமே புரியவில்லையே, நீங்கள் சொல்லுவது?

நிக்சன் : நீங்கள் இந்தியாவுக்குப் போகுமுன்பு, நான் அங்கு போயிருந்தேன்.

டிட்டோ : ஆமாம் ; செய்தி பார்த்தேன்.

நிக்சன் : அப்போது சென்னைக்குப் போகும் வாய்ப்பும் கிடைத்தது எனக்கு. பிற்பகல் மூன்று மணி. நான் காரிலே வந்து கொண்டிருந்தேன். வழி நெடுக, வர்ணக் காகிதத்தாலான தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. காரோட்டியிடம் இவைகள் என்னென்றேன். ஊர்வலம் என்றான்: என்ன ஊர்வலம் என்றேன்: அதோ வாத்திய ஒலி கேட்கிறது பாருங்கள் என்றான். அதற்குள் மோட்டார் வலது பக்கம் திரும்பியது. எதிரே மிகப் பெரிய ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது. அந்த ஊர்வலத்தை மிகப்பெரிய என்றுதான் சொல்ல முடியும் 'மிகப்பெரிய' என்பதற்குமேல், உலகத்தில் எந்த மொழியிலும் வார்த்தை இல்லையென்றுதான் நினைக்கிறேன். அவ்வளவு பெரிய ஊர்வலம். என்னுடைய காரை ஒரு மணி நேரம் நகர்த்தவே முடியவில்லை. ஊர்வலத்தில் வந்த ஒருவரை அழைத்து இது என்ன ஊர்வலம் என்றேன். அவர், இது வரவேற்பு என்றார். யாருக்கு என்றேன். அதோ திறந்த காரில் மாலையுடன் வருகிறாரே அவருக்கு என்றார். அதற்குள் அந்தத் திறந்த காரும் என்னருகில் வந்து விட்டது. அந்த மோட்டாரில் மாலைகளால் மறைக்கப்பட்ட மனிதர் ஒருவர் கைகூப்பி வணங்கியபடி நின்று கொண்டிருந்தார். அவரது வயதையும் முகத்தையும் கண்டு கொள்ள முடியாத வகையில் மாலைகளுக்குள் அவர் புதையுண்டு கிடந்தார். அந்த ஊர்வலத்தின் விபரத்தை பிறகுதான் என்னால் விசாரித்துத் தெரிந்துகொள்ள முடிந்தது.

வட இந்தியாவைச் சேர்ந்த ஒரு பணக்காரரின் பெயர், தென்னிந்தியாவில் ஒரு கிராமத்திற்குச் சூட்டப் பட்டிருக்கிறதாம். அந்தப் பெயரை நீக்கிவிட்டு, அந்தக் கிராமத்திற்கு ஏற்கனவே இருந்த தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டுமென்று போராட்டம் நடந்ததாம். அதில் ஆறுமாதம் சிறையிருந்து விடுதலை செய்யப்பட்ட வருக்கு நடந்த வரவேற்புத்தான் அது. அந்தப் போராட்டமும் சாதாரணமானது இல்லையாம். பொது மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிற ஒரு விடுதலைக் கட்சியால் நடத்தப்பட்ட போராட்டமாம் அது.

டிட்டோ : விடுதலைக் கட்சியா? இந்தியாவே விடுதலை பெற்ற நாடு தானே ! அதில் இப்போது ஏது விடுதலைக் கட்சி ?

நிக்சன் : நல்ல கேள்வி ! இதற்காகத்தான் அந்தக் கட்சியைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொண்டு வந்தேன்,

அந்த விடுதலைக் கட்சியினர் தென்னிந்தியா ஒரு தனி நாடு என்கிறார்கள். அதற்குப் பூமி நூலை ஆதாரம் காட்டுகிறார்கள். தென்னிந்தியாவில் உள்ளவர்கள் திராவிடர் என்ற தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறார்கள். அதற்குச் சரித்திரத்தை விரித்துவைக்கிறார்கள் 'ஆகவே, தென்னாடு வட இந்தியாவுக்கு அடிமைப் பட்டிருக்கிறது: தென்னிந்தியா விடுதலை பெறவேண்டும்: வட நாட்டுத் தொடர்பு அறுபடவேண்டும்' என்கிறார்கள்.

டிட்டோ : (முகத்திலே கேள்விக் குறிகள் முளைக்கின்றன)

நிக்சன் : நீங்கள் பொதுவுடமையிலே நம்பிக்கை கொண்டவர்கள். ரஷ்யாவும் பொது உடமையில் நம்பிக்கை கொண்டது தான். ஆனாலும், ரஷ்யக் கூட்டமைப்புக்குக் கட்டுப்பட மறுக்கவில்லையா? கோமின்பாமிலிருந்து நீங்கள், விலகத் துடிக்கவில்லையா? அதற்காகப் போராடவில்லையா ! அது போலத்தான் அவர்களும் சொல்லுகிறார்களாம். வட நாட்டிலிருந்து தாங்கள் பிரிந்து சுயேச்சையாக வாழவேண்டும் என்கிறார்கள். அதே நேரத்தில் வட நாட்டைப் பகைத்துக் கொள்ளமாட்டோம், சிநேகமாகவே இருப்போம் என்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், உங்களின் கடந்த காலப் போராட்டம் இன்று தென்னிந்தியாவில் நடைபெறுகிறது.

டிட்டோ : (திகைக்கிறார்)

நிக்சன் : நீங்கள் 'ஆவடி' பற்றிச் சொன்னீர்கள். இந்தியாவோடு சேர்ந்த ஒன்பது மாநிலங்களின் ஒத்துழைப்பில், அரசாங்கத்தின் ஆதரவில் நடை பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மூன்று லட்சம். ஆனால், நான் கண்ட வரவேற்பு ஊர்வலம், சென்னை நகரில் மட்டும், அந்த நகர் மக்களால் மட்டும் நடத்தப் பட்டது. அதில் கலந்து கொண்டோர் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோர். சென்னை நகர் மட்டும்—அந்தக் கட்சியின் முழு ஆதரவு கூட அங்கே காட்டப்படவில்லை !

டிட்டோ : நான் போயிருக்கும் போது இப்படிப்பட்ட காட்சிகளையெல்லாம் காண முடியவில்லையே. மிஸ்டர் நிக்சன், அப்பேர்ப்பட்ட ஒரு கட்சி அங்கே இருக்கிறதென்றால், அது வரவேற்கப்பட வேண்டிய ஜன நாயகக் கட்சிதான்,

நிக்சன் : நேருவுக்கு, தென் இந்தியாவில் பலத்த எதிர்க்கட்சி அதுதான் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

டிட்டோ : தெரிந்திருந்தால் அந்தக் கட்சியின் தலைவனையே சந்தித்து வந்திருப்பேன். தவறு செய்து விட்டேன்.

நிக்சன் : உண்மையைச் சொல்ல வந்தேன். இதற்காக என்னைத் தவறாகக் கருதி விடாதீர்கள். நேரில் பார்த்தால்தானே எல்லாம் புரிகிறது. இதனாலேதான் நேருவின் வெளிநாட்டுப் பேச்சை தென்னிந்தியாக்காரர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களாம். 'அங்கே சமாதானத் தூதுவர், இங்கே சர்வாதிகாரப் பித்தரா, என்கிறார்களாம் !

[மாநாட்டுப் பந்தலில் மணி ஒலிக்கிறது.]

நிக்சன் : மணி அடித்தாகிவிட்டதா ? நாம் இன்னும் உணவு கொள்ளவில்லையே. மாநாடு தொடங்கப் போகிறதா !

டிட்டோ : பரவாயில்லை; உணவு தானே ! ஒரு பெரிய உண்மையையே தெரிந்து கொண்டேனே!

[போகிறார்கள். சமாதானப் புறாக்கள் கூட்டுக்குள் அடைகின்றன]

கலைச்சொற்கள்...

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வில்லை. அதற்கு மாருக, எந்த வட எழுத்தை எந்த எந்தத் தமிழ் எழுத்தால் குறித்துக் காட்டவேண் டும், வட மொழிக் கூட்டெழுத்துக் களை எப்படித் தமிழில் எழுதவேண் டும் என்பவற்றைச் சில சூத்திரங் களால் விளக்கி, வட எழுத்து வரல் தாங்கிகளின் கன்னத்தைக் கதை பாட வைக்கின்ருர்.

ஆகவே, கலைச் சொற்களை எழுத் துப் பெயர்ப்புச் செய்யத் தமிழன் எவனும் தன் மானத்தை விலை கூறிப் பிறமொழி எழுத்துக்களைக் கடன் வாங்கக் கூடாது; கடன் வாங்காமல், ஏற்ற முறையில் எழுத்துப் பெயர்ப்புச் செய்ய முடி யாது என்று மனம் ஒடியவும் கூடாது. தமிழில் இருக்கின்ற 31 எழுத்துக்களை வைத்துக்கொண்டே முயன்று வெற்றி கண்டு வீர முழக் கம் செய்வதே முறை. எப்படித் தமிழ் எழுத்துக்களைக் கொண்டே, வேண்டிய ஒலிகளுக் கெல்லாம் வடிவம் தர இயலும் என்பது கீழே ஒருவாறு விளக்கப்படுகின்றது. இவ் விளக்கம் முடிந்த முடிவு அன்று. இம் முடிவுகளைக் கலைச் சொற்களை எழுத்துப் பெயர்ச்சி செய்பவர்கள் ஆராய்ந்து ஏற்றன வாகப் புலப்படுமாயின் கைக் கொள்ளல் நன்று.

முதலில் ‘g’ என்ற ஒலியைத் தமிழில் எப்படி எழுதிக் காட்டுவ தென்று பார்க்கலாம். ‘கங்குல்’ என்ற சொல்லில், முதலில் உள்ள ககரம், ‘k’ ஒலியைத் தருகிறது; பின் உள்ள ககரம் ‘g’ ஒலியைத் தருகிறது. தமிழில் உள்ள க, ச, த, ப ஆகிய எழுத்துக்களின் ஒலி முறை ஆய்ந்த கால்டுவெல் பெரி யார் இவை சொல்லுக்கு முதலில் வெடி ஒலியாக (k, ch, th, p போன்று) ஒலிக்கும் என்றும், சொற்களின் இடையில் இரட்டித்து வருமிடத்திலும் அவ்வாறே ஒலிக்கு மென்றும் எழுதியுள்ளார். ஏனை இடங்களில்இவை மெல்லொலியாக (g, s, dh, b ஆகியவை போன்று) ஒலிக்கும் என்றும் அவரே கூறுகின் ருர். எடுத்துக் காட்டு: பச்சிலை, பசை. இதிலிருந்து என்ன புலப் படுகின்றது? க, ச, த, ப என்ப வற்றை (டகரத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்) இரட்டித்து எழுதி ஞல் அவை வெடி யொலியைக் கொடுக்கும். ஒற்றையாக எழுதி ஞல், மெல்லொலியைக் கொடுக் கும். சொல்லுக்கு முதலில், இவற்றுள் ஒன்றை ஒற்றையாக எழுதிஞலும் அது வெடி யொலி யையே கொடுக்கும் என்பது உண்மை. ஆனல் தெளிவு கருதி சொல்லுக்கு முதலிலும், இரட்டை யாக எழுதிஞல் வல்லொலி, ஒற் றையாக எழுதிஞல் மெல்லொலி (g, d, s, dh, h பேரன்றவை) என்ற விதியைக் கொள்ளலாம். கலைச் சொற்கள் வெடியொலி, மெல்லொலி இரண்டிலும் துவங்கு கின்றன. ஆகவே கலைச் சொற்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்யும் போது, மேற்கூறிய விதி இன்றி யமையாததாகவும் உள்ளது. ஆகவே,

மெல்லொலி		வெடியொலி	
Ga	— க;	K	— க்க;
Sa	— ச;	Cha	— ச்ச;
Da	— ட;	Ta	— ட்ட;
Dha	— த;	Tha	— த்த;
Ba	— ப;	Pa	— ப்ப;

என்பன நேர் ஒலிகள் ஆகின்றன.

மெல்லொலிகளே (g, d, dh, b) இரட்டித்து வருமாஞல் அவற்றைத் தமிழ் எழுத்துக்களால் எப்படிக் குறிப்பது? Eddington என்பதை எப்படி எழுதுவது? எட்-இங்க்ட்ட்ன் என்று எழுதலாம். ஆகவே;

gga — க் - அ; dda — ட் - அ;
dhdha — த் - அ; bba — ப் - அ;

என்பன நேர் ஒலிகள் ஆகும். ‘za’ என்ற ஒலியை ‘ச் - அ’ என்று எழுதலாம்:

கூட்டொலிகளையும் தமிழில் பின் வருமாறு எழுதலாம்:

Ja	(ஜ)	— ட்ச;
sha	(ஷ)	— ழ்ச;
ksha	(க்ஷ)	— க்க்ழ்ச;
ha	(ஹ)	— ஃஅ.

‘Ja’ என்ற அசையை (syllable) ஒலிக்கும்போது அதில் டகரக்கூறு, சகரக் கூறு ஆகியவற்றை உணர்கி ருேம். வட மொழியில் ‘ஜ’வில் தொடங்கும் சொல்லைத் தமிழில் எழுதும்போது சகரத்தை அதற்கு மாருகப் பயன்படுத்துகிருேம். இவ் வழக்கும் அவ் ஒலியில் சகரத்தின் கூறு இருப்பதை வலியுறுத்தும். ஆகவே ‘Ja’ ஒலியைக் ‘ட்ச’ என்று எழுதுவதில் தவறு ஒன்றும் இல்லை.

ழகரத்துக்கும் ‘ஷ’ என்ற ஒலிக்கும் மிகவும் தொடர்புண்டு. ழகரத்திலிருந்துதான் ஷகரம் வந்திருக்கவேண்டும் என்பது ஒலி யியல் வல்லார் பலர் கொள்கை. மொழி நூல் ஆசிரியர் திரு, மாக றல் கார்த்திகேய முதலியார் அவர்கள் பாழை என்ற சொல்லி லிருந்தே பாஷை உருவானது என்று விளக்குகிருர். இன்றும் தமிழ் நாட்டில் சில இடங்களில் வாழ்வோர் திருவிழாவைத் திரு விஷா என்று வழங்குகின்றனர்; திருமழிசையைத் திருமிஷி என் கின்றனர். எனவே ‘ழ’ ஒலி யோடு நெருங்கிய தொடர்புடையது ‘ஷ’ ஒலி. ழகரத்தோடு சிறிது சகரக் கூறுபாட்டைச் சேர்த்தால் ‘ஷ’ ஒலி பிறக்கும் ஆகவே ‘ஷ’ வை ‘ழ்ச’ என்று எழுத லாம். ‘க்ஷ (Ksha)’ என்பது ககர மெய்யும் சேர்ந்த கூட்டொலி; ஆகவே அதை ‘க்க்ழ்ச’ என்று எழுதலாம். ‘ஹ (HA)’ என்ற ஒலிக்கும் தமிழில் உள்ள ஆய்த ஒலிக்கும் ஒற்றுமை உண்டு ஆகவே ‘ஹ’ வை ‘ஃஅ’ என்றும், ‘ஹி’ யை ‘ஃஇ’ என்றும் எழுதலாம்.

ஆங்கிலத்தில் உள்ள ‘FA’ என்ற ஒலியை எப்படி எழுதுவது? ‘ஃப’ என்று எழுதலாம். ‘ஃப’ என்று எழுதும் வழக்கம் இன்றும் பலரால் கைக் கொள்ளப்பட்டு வருகின்றது. Chronology என்ற சொல்லின் முத லில் உள்ள ‘ch’ என்ற எழுத் துக்கள் தரும் ஒலியை “ஃக்” என்று குறிக்கலாம்.

பிறகு, உயிர் எழுத்திலும் நாம் சிறிது மாற்றம் செய்ய வேண்டி யுள்ளது. காட்டாக, MAT என்ற சொல்லில் உள்ள உயிர் ஒலியைத் தமிழில் எப்படிக் குறிப்பது? அதை ‘மாட்ட்’ என்ருே, ‘மேட்ட்’ என்ருே குறிக்க முடியாது. என்ரு லும், அந்த ஆங்கில உயிர் ஒலியில் ஆகாரத்தின் கூறும், ஏகாரத்தின் கூறும் அடங்கியுள்ளன என்பது உண்மை. ஆகவே, அதை ‘ஆஎ’ என்று குறிக்கலாம். MAT என் பதை ‘மாஎட்ட்’ என்று எழுத லாம்.

மேற்கூறிய செய்திகளை நினைவில் வைத்துக்கொண்டு எழுத்துப் பெயர்ப்புச் செய்ய முற்பட்டால், நாம் வெற்றியே பெறுவோம் என் பது உறுதி.

ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

தென்றல் திராவிட நாடு பிரிவினை நாள் மலர்-அதன் இயல்புக்கேற்ற வண்ணம் எழில் மிகு கருத்துக் கருவூலங்களை-அறிவு விருந்துகளை அள்ளித் தந்திருக்கிறது......சரித்தி ரக் காட்சிகளைப் படித்ததும் பிரான் சின் வரலாற்றை-முக்கிய பகுதியை-அறிய முடிகிறது மீண்டும்.

ரஸ்புடீன்-ரஷ்யாவின் போகப் பூனை-அவனை தன்னருமை மொழி நடையால், மிகு சுவையோடு விளக்குகிருர் புரட்சிக் கவிஞர்.

‘தர்க்கவாதியும்,’ ‘பொதுச் செயலாளரும், ‘போர்க் கொடி ஏந்துவோம்’ என்று கூறிஞல், அதற்காக எந்த இராஜ தண்டனை கிடைத்தாலும் நாமும் அதில் பங்கு பெறுவோம் என்று கூறத்தான் தோன்றுகிறது. மற்றவைகளும் நமது பாராட்டுதலைப் பெறுகின்றன.

மொத்தத்தில் தென்றலைப் படித்து முடித்ததும் நம்மையறியா மல் நமது வாய்-உள்ளம்-தென்றல் -வாழ்க!”—என வாழ்த்தத்தான் செய்கிறது.

அன்பன்
மதிவாணன்.
தங்கசாலை

◉

தென்றல் ஆசிரியர் அவர்களுக்கு, ‘வணக்கம்’ தங்கள் திராவிட நாடு பிரிவினை நாள் மலர் கண் டேன்! களிப்புற்றேன்!! மலரில் உள்ள அத்தனை கட்டுரைகளும் கதைகளும் என்னைப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டன. உதாரணமாக, புரட்சிக் கவிஞர் எழுதிய சரித்திரப் படைப்பாம் “ரஸ்புடீன்” நாடகம் பல அட்டூழியங்கள் புரியும் இன் றைய மடாதிபதிகளுக்கோர் எடுத் துக் காட்டு! அடுத்து, ம. ரா. பூபதி, அவர்களின் கருத்துக் கருவூல மான “கங்கம்மா சபதம்”, இளம் பரிதியின் “தி. மு. கழகம் வர லாறு” கண்ணதாசனின் “வள்ளு வன் மூத்தோன்” ஈ. வே. கி. சம்பத்தின் “சரித்திரக் காட்சிகள்” யாவும் அறிவுக்கு உகந்த படைப்பு களாகும். திராவிட நாடு தனி நாடாகப் பிரிய வேண்டுமென உழைக்கும் தென்றலை நான் பாராட்டுகிறேன்.

தங்கள்
“தாரகை ஜெஹபர்”
கொடிக்கால் பாளையம்

◉

மலர் பிரித்து மணம் நுகர்ந்து மகிழ்ந்தேன். மல்லிகை மலரை விட மனோரஞ்சித மலருக்கு மதிப் பும் மணமும் அதிகம்தானே! தென்றல் இதழ்களை மல்லிகை மலருக்கு ஒப்பிட்டால் தென்றல் சிறப்பு மலர்களை மனோரஞ்சித மலருக்கு ஒப்பிடுவதே சாலவும் பொருந்துவதாகும். சிறப்பு மலர் களில் மிகுதியான சிறப்பை அன்பர் கள் எதிர்பார்ப்பது இயற்கை. அந்த வகையில் தென்றல் அன்பர் களின் உள்ளங்களை இன்பத்தில் ஆழ்த்த என்றுமே தவறுவதில்லை. தென்றல் திராவிட நாடு பிரிவினை மலர் பல்லாற்ருனும் சுவைபயப்ப தாய் அமைந்துளது. வரலாறு, இலக்கியம், கதை, கவிதை, நாட கம், கொள்கை விளக்கம் ஆகிய பகுதிகளைத் தாங்கி மிளிர்கின்றது தென்றல் சிறப்பு மலர். புரட்சிக் கவிஞரின் “ரஸ்புடீனும்,” “கங் கம்மா சபதமும்” மலருக்கு மணி மகுடம் போன்றவை. அவையே என்னை வெகுவாகக் கவர்ந்த பகுதி களுமாம். ‘போர்க் கொடி ஏந்து வோம்.’ நல்ல எழுச்சிப்பண். என் றும் இறவாத இலக்கியப்பணியை முதற் பணியாகக் கொண்டு செய லாற்றும் தென்றல் மென்மேலும், பல்வழியினும், சிறந்து வளர்ந் தோங்க என் உளங்கலந்த நல் வாழ்த்துக்கள்.

இங்ஙனம்,
இராம. தமிழன்பன்,
வேகுபட்டி.

◉

தென்றலினைக் கண்டோம். மென் மையான காற்ருேடு, நல்லறிஞர் களின் “மலரின்” மணத்தையும் சுமந்து இன்பத்தில் ஆழ்த்தியது.

மலரை நுகருமுன் தென்னகம் தந்த புதுவைக் கவிஞர் காட்சி தரும் முகப்பினைக் கண்டோம். முகப்பை, மகிழ்ச்சிப் பெருக்கோடு புரட்டினோம். “திராவிடம்” தந்த “ஈரோட்டுச் செம்மலின்” கட்டுரை யைக் கண்ணுற்ருேம். பயனுள்ளது கண்டு மகிழ்ந்தோம். புரட்சிக் கவி யின் “ரஸ்புடீன்” நெஞ்சில் நீங்கா இடம் பெற்றது. “தமிழ்ப் பித்தனின்” ‘போர்க் கொடியும்’ “சொல்லின் செல்வர்” தரும் “சரித்திரக் காட்சிகளும்.” மலரை மென்மேலும் மனமிக்கதாய் ஆக்கி யுள்ளன. மலர் எங்கள் கரங் களிலே தவழ்ந்தது. மகிழ்ந்தோம்! இன்புற்ருேம்!

அன்பர்கள்,
இராஜசந்திரன்,
உமாசுந்தர்,
தங்கவயல்.

பகுத்தறிவுக் கருத்துக்கள் பொதிந்தது.
சீர்திருத்தக் கொள்கைகள் நிறைந்தது.
“திருந்தியவன்”
[நாடகம்]
ஆசிரியர் :
திரு. முக. கௌசிகன்
விற்பனைக்கு 25 சதவிகிதக் கழிவு உண்டு.
திரு. முக. கௌசிகன்,
14, முதல் தெரு,
சக்ரியா காலனி, சென்னை - 24.

அக்டோபர் 25-ல் வருகிறது !
திராவிட முரசு
இலக்கிய மாத இரு ஏடு !
விலை 2 அணு.
ஆசிரியர் : நா. பூ. சந்திரன்.
விற்பனையாளர் அணுகுக.
206, தம்புசெட்டி தெரு,
சென்னை - 1.

வெண்பாப் போட்டி

16. கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்
இப்பொழுது வந்தே இடங்கேட்டால்—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப் போட்டி 16க்கு நாம் கொடுத்த அடியில் ''.........'வந்து இடங்கேட்டால்'.........'' என்று தவருகக் கொடுத்துவிட்டோம். அதனை 'வந்தே இடங்கேட்டால்' என்று திருத்திக்கொள்ளவும். இதைச் சில நேயர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்களுக்கு நம் நன்றி.

இந்த இதழில் வெண்பாப் போட்டி 16ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சில வற்றையும் வெளியிட்டுள்ளோம்.

◉ *கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்*
இப்பொழுது வந்தே இடங்கேட்டால்--தப்பவிடேன்
ஈரோட்டுப் போர்வாளை எம்காஞ்சிச் சாணையிலே
கூராக்கித் துண்டிப்பேன் கொன்று.

—''பாபன்'', நாங்குனேரி.

★

--பொற்பிழந்த
மூர்க்கர் தமைச்சாடி முட்கொறடாக் கொண்டடித்துத்
தூக்கிலிட்டு மாய்ப்போம் தொடர்ந்து.

—சோ. சிவராமன், பவானி.

★

--அப்பொழுதே
ஆழக் குழிவெட்டி ஆங்கவரை ஆழ்த்திவைத்து
வேழக்கால் ஏறச்செய் வேம்.

—அருகு. கந்தன், பாகனேரி.

★

--அக்கணமே
சிண்டைப் பிடித்துச் செவிட்டில் அறைந்துவிட்டு
செங்கடலைக் காட்டிடுவேன் தேர்ந்து.

—சுப. நாராயணன், மேலைச்சிவபுரி.

★

--சற்றேனும்
எண்ணு தவரை இடுக எரியினுள்
தொன்கா மறையால் தொடுத்து.

—கு. அ. கருப்பண்ணன், கோவை.

★

--தப்பா
நெருப்பிடுவோம் நும்முருவை நில்லாதீர் என்று
செருப்பால் அடிப்பேன் சினந்து.

—இராம. இலக்குமணன், புதுப்பட்டி.

★

--அற்பருடைக்
கற்பனையால் உண்டான காமுகரை எம்வீட்டுக்
கற்படியாய் ஆக்கிடுவோம் காண்.

—பெருமாள், ஆரணி.

★

--கொற்றவாகேள் !
நெற்றிக்கண் காட்டுகிற நீள்சடையன் ஆனாலும்
வெட்டுவேன் வாளால் விரைந்து.

—சொ. வள்ளிதாசன், அப்பிபட்டி.

★

--தப்பாமல்
கற்பழித்த கூட்டத்தைக் கண்டதுண்ட மாகவெட்டி
நற்பெயரை ஏற்றிடுவோம் நாம்.

—சோ. இளங்கோவன், பாகனேரி.

★

--நிச்சயமாய்
காட்சிப் பொருளாய் கடவுளரைச் செய்துபின்
மீட்சியடை யாமல்செய் வேன்.

வை. பொன்னுசாமி, சீரங்கம்.

--குப்புறத்
தள்ளித் தடிகொண்டு தாக்கிடுவோம் தீர்த்தபின்
கொள்ளியும் வைப்போம் குளிர்ந்து.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை,

★

--தப்பாமல்
காலா லுதைத்துக் கதுப்பிட்(ப்) புடைத்துப்பின்
கேளாதே என்பே னிடம்.

—எஸ். இராசு. திருப்பாச்சேத்தி.

★

--தப்பாமல்
நல்கிடுவோம் தொல்செருப்பால் நானூறு கோடியடி
பல்தெருவும் கூடுமிடம் பார்த்து.

—பி. எபிவைலட் மனோகர பாய், வேம்பார்.

★

--பற்களொரு
முப்பத்தி ரண்டு முடைத்துமுகத் திற்காரித்
துப்பித்து ரத்துவமஞ் சோம்.

—க. மா. முத்துச்சாமிப் புலவர், அருப்புக்கோட்டை.

★

--நிச்சயமாய்
தூ! வென் றுமிழ்நீரைத் தூவி யவர்முகத்தில்
சா! வென்று சாற்றிடுவோம் யாம்.

—இ. வி. ஜேக்கப், திருச்சி.

★

--சிற்றிடையே !
சொல்வேன் புறமிருக்க ; செல்வேன் செருப்பெடுக்கப்
புல்லரும் போவர் விரைந்து.

—மு. இராசராசன், பாண்டமங்கலம்.

★

--பற்பிடுங்கி
நாக்கறுப்போம் ஆவிதனை நங்கையர்தம் கைத்துடப்பம்
போக்கிடுமே நையப் புடைத்து.

—கே. எம். வேலன், பிள்ளையார்பாளையம்.

★

--தப்பாது
வீரமுடன் வாளெடுத்து வெட்டித் தலைசாய்த்து
பாரதனில் காண்பிப்பேன் பார்.

—வெ, சகாதேவன், சிங்கம்புணரி.

★

--திட்டமுடன்
வேற்றகமும் செல்லவிடேன் வேலையிலும் சாகவிடேன்
வேற்கொண்டே வேகச்செய் வேன்.

—துரை. மோகனன், மேலைச்சிவபுரி.

★

--செப்பிடுவோம்
அன்று செருப்பால் அடிபட்ட தேன்மறந்தீர் ?
இன்றதையாம் ஏற்குமுன் ஓடும்.

—வே. அர. சைலவாசன், வேலூர்.

★

--தப்பாதத்
தீயவர்தம் அங்கமெலாம் துண்டாக்கி அம்பலத்தே
தீயில்தான் வேகவைப்போம் தேர்.

—மு. கா. பக்கீர்முகம்மது, ஆத்தங்கரை.

★

--அப்படியே
காதைப் பிடித்திழுத்துக் கண்காட்சி சாலையிலே
மோதி அடைப்போம் முனிந்து.

—அரியகனி அம்மையார், குறும்பலாப்பேரி.

★

--தப்பாது
மொட்டை அடித்து முகப்பட்டை தீட்டியிங்கே
சட்டி கொடுத்திடுவேன் தேர்ந்து.

—எம். என். பழனிசாமி, சிவகங்கை.

★

--அற்பமதியர்க்
கற்பனையில் வந்துதித்த காமுகரை விந்தியத்துக்
கப்பாலே ஓட்டிடுவேன் காண்.

—ஆ. வி. நாதன், கோவை.

★

--நிற்கவைத்து
மக்கள்தம் முன்னே மடையோரின் தீச்செயலைக்
கக்கவைத்துக் காட்டுவேன் காண்.

—எல். பி. சமாதானம், அண்ணாமலைநகர்.

★

--பற்றுடனே
பள்ளி அறைக்கழைத்துப் பஞ்சணையில் கஞ்சூட்டி
கொள்ளிதனை வைத்திடுவோம் கூடி.

—ராதா, தாரமங்கலம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.